
பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று.




**சந்தா விபரம்.**

| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1-12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

# [வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ |
|---|---|
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |


நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பி... படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழு...
மிழிந்த பிறப்பாய் விடும்—குற...

மாலை க | குரோதன-வூ மாசி-மீ௳ கஎ-உ (28—2—26) ஞாயிற்றுக்கிழமை | மலர் சஉ



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்

S. இராமநாதன்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

S இராமநாதன் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

## காங்கிரசு எது?

தேச மகாஜனங்களின் ஒரே அபிப்பிராயத்தையாவது, அல்லது பெரும்பாலோருடைய அபிப்பிராயத்தையாவது தெரியப்படுத்தக் கூடிய ஒரு ராஜீயஸ்தாபனம் காங்கிரசாகும்; அச்சபையும், ஒரு லட்சியத்தையே குறிக்கொண்டு நிற்கும். இதில் பல கக்ஷிகளுமிருக்கலாம்; "பிடித்தவருக்கெல்லாம் பெண்டு" என்ற மாதிரி கக்ஷிகளின் பின்னால் காங்கிரசு போகாது. கக்ஷிகள் காங்கிரசைத் தொடரும். தங்கள் தங்கள் கக்ஷியைக் காங்கிரசில் வற்புறுத்தலாம்; அதைக்காங்கிரசு ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில், தனித்து நின்று எக்கக்ஷியும், தனது கொள்கையைப் பிரசாரம் செய்யலாம். உதாரணமாக, காங்கிரசு, மிதவாதிகளிடமிருந்து ஒத்துழையாதாரிடம் வந்தபோது, மிதவாதிகள்—ஜஸ்டிஸ் கக்ஷியார்கள் இதிலிருந்து விலகி தங்கள் பிரசாரத்தைச் செய்தார்களேயொழிய, காங்கிரசின் பெயரைச் சொல்லவில்லை. கயாவில் சுயராஜ்யக் கக்ஷி முளைத்தபோது அதின், மாபெருந் தலைவர் தேசபந்து, காங்கிரசின் தலைவராக இருந்தும், காங்கிரசை விட்டு விலகி, கட்சியைப்பற்றி பிரசாரம் செய்தது எல்லாருமறிவர். அதுதான் உண்மையும் யோக்கியமுமாகும். இப்போது சுயராஜ்யக்கக்ஷிக்காரர் பலர் எங்களோடு காங்கிரசு ஒன்றிவிட்டதென்கிறார்கள். காங்கிரசில் தலைவராக இருந்தவர்கள் பலர் காங்கிரசில் சுயராஜ்யக்கட்சி ஒன்றிவிட்டதென்கிறார்கள். இரண்டும் அர்த்தம் ஒன்றுதான். ஆனால், காங்கிரசு சுயராஜ்யக் கட்சியுடன் ஒன்றிவிட்டால் சுயராஜ்யக் கட்சிக்கு ஓட்டுக்கொடுங்கள் என்றுதான் சொல்லவேண்டும். காங்கிரசுக்கு ஓட்டுகொடுங்கள் என்று எப்படிக் கேட்கலாம்? சுயராஜ்யக்கக்ஷி காங்கிரசுடன் ஒன்றியிருந்தால், காங்கிரசுக்கு ஓட்டுக்கொடுங்கள் என்று சொல்லவேண்டுமே யொழிய, சுயராஜ்யக்கக்ஷிக்கு ஓட்டுக்கொடுங்கள் என்று எப்படிக் கேட்கலாம்? இதைத்தான் பெரிய இடத்துப்பித்தலாட்டம் என்று சொல்வது. காங்கிரசு, என்று ஒன்றிருக்குமானால் மூவகை பகிஷ்காரமும் நிர்மாணத்திட்டமுமல்லவோ தேசத்தில் நடைபெறவேண்டும். சட்டசபைக்குக் காங்கிரசை சுயராஜ்யக்கக்ஷியார் உபயோகிப்பதாக இருந்தால், ஏன் அதையே மிதவாதக்கக்ஷி— ஜஸ்டிஸ்கக்ஷியும் உபயோகிக்கக்கூடாது? ஆனால் அவர்கள் சத்தியத்திற்குப் பயந்து அப்பெயரைச் சொல்வதில்லை. மேலே சொன்ன மாதிரி, காங்கிரசில்லையென்பதற்கு சில உதாரணம் சொல்லலாம். மிதவாதிகளும், ஜஸ்டிஸ் கக்ஷியாரும் சுயேட்சைக்கக்ஷியாளரும், ஒத்துழையாதாரும் பிரிந்துபோய்விட்டார்கள். காங்கிரசின் ஆணிவேராகிய மகாத்மா காந்தியடிகளும் விலகிக்கொண்டிருக்கிறார். இப்போது இருப்பதெல்லாம் சில சுயராஜ்யக்கக்ஷிக்காரர்களே; இவர்களுக்கும் ஒரு திட்டம் கிடையாது. ஒருசாரார் முட்டுக்கட்டை; ஒரு சாரார் ஒத்துழைப்பு; ஒரு சாரார் உத்தியோகம்; ஒரு சாரார் உத்தியோக பகிஷ்காரம்; ஒரு சாரார் சுயராஜ்யக்கக்ஷியே இல்லாமல் செய்து புதுசிருஷ்டி செய்கிறவர்கள். ஆனால் இவர்கள் எல்லாரும் சுயராஜ்யக்கட்சிக்காரர்களே. பளா! பளா!! நல்லகட்சி!!! நல்ல காங்கிரசு!!!! பழம் புலியாகிய ஸ்ரீமான். விபின சந்திரபாலர் முதலிய காங்கிரசுக்காரர்கள் சொல்வது போல, அருத்தமில்லாத கட்சியென்று தான் இதைச் சொல்லவேண்டும். மற்றக்கட்சிகளைப்போல இதுவும் ஒரு சாதாரணக்கட்சியேயல்லாமல், காங்கிரசின் பெயரைச்சொல்ல இதற்கு ஒரு தனியான அந்தஸ்துக்கிடையாது. மகாத்மா மவுனம் பூண்டிருக்கிறார் இவர்கள் அதை கட்சியை ஆதரிப்பதாக வியாக்கியானம் செய்துகொண்டார்கள். அது முற்றும் தப்பு. சட்டசபைக்குப் போகக்கூடாதென்பது அடிகள் கருத்து. அப்படியில்லாவிட்டால் சுயராஜ்யக்கட்சிக்காவது, காங்கிரசுக்காவது ஓட்டுகொடுங்கள் என்று பகிரங்கமாய்ச் சொல்லியிருப்பார். குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு ஓட்டுசெய்ய வேண்டாமென்று ஒத்துழையாமை உச்சத்திலிருந்தபோது கூடச் சொல்லவில்லை. பகிஷ்கரியுங்கள் என்று பொதுவாகத்தான் சொல்லிவந்தார். இன்றைக்கு பகிஷ்கரியுங்கள் என்று சொல்லவழியில்லை. எல்லாரும் ஆடுகிறார்கள்; ஆகையால் மவுனம்பூண்டார். இதை சுயராஜ்யக்கட்சிக்காரரும், காங்கிரசின் தலைவர்கள் என்போரும்; சாதகமாய் உபயோகப்படுத்திக்கொண்டு சட்டசபை வேட்டைக்கு புறப்பட்டுவிட்டார்கள். ஸ்ரீமான்கள். ராஜகோபாலாச்சாரியார், கலியாணசுந்தரமுதலியார் சுயராஜ்யக்கட்சியே காங்கிரசாக மாறிவிட்டதென்கிறார்கள். நாலைக்கு ஸ்ரீமான்கள். சாஸ்திரியாரும், சிவசாமி ஐயரும் மிதவாதக்கட்சியே காங்கிரசாக மாறிவிட்டதாகவும், மற்றுநாள் ஸ்ரீமான்கள். ராமசாமி முதலியாரும், தணிகாசலம் செட்டியாரும் ஜஸ்டிஸ் கட்சியே, காங்கிரசாக மாறிவிட்டதென்றும் சொல்லலாம். ஒவ்வொருவருக்கும் சமமாகத்தான் இப்போது காங்கிரசின் பாத்தியதையிருக்கிறதேயொழிய எந்தக்கட்சிக்கும் அதிக பாத்யதையில்லை. 1921—23, இதற்கிடையில் காங்கிரசுக்கிருந்த நிலைக்கு வருமானால், மேலே, சொன்ன எந்தக்கட்சியும். சீ. சீ புளிக்குமென்று வெகுதூரம் போய்விடும். ஆகையால், உண்மைக் காங்கிரசு சிறையிலிருக்கிறது. இப்போது வெளியில் தெரிகிறது சுயபலக் காங்கிரசு. ஆகையால் வாக்காளர்களே! ஓட்டர்களே!! யாராவது வந்து நான் காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சிக்காரன். எனக்கு ஓட் கொடுங்கள் என்று வந்தால், பசுத்தோலைப் பார்த்து ஏமாறாமல்; முன் பின் யோக்கியதையைக் கவனித்து வோட் செய்யுங்கள். அது போலவே மற்றக் கட்சிக்காரர்கள் வந்தாலும், காங்கிரஸ் தோல் போர்த்தாமலிருந்தாலேயே புறக்கணிக்காமல் அவர்களுடைய முன்பின்யோக்கியதையைக் கவனித்து ஓட்கொடுங்கள் இதைவிட்டு, போலித்தலைவர்களின் பிரசங்கத்திலாவது, பத்திரிகைகளில் பெரிய எழுத்துக்களால் கோடுகட்டி, பிரசுரமாகியிருக்கிற பகவத்கீதைக்காவது மயக்கி ஏமாந்துவிடாதீர்கள். நிற்க, ஒரு சூட்சி நாடகமொன்று நடக்கிறது. அதையும் உங்களுக்குத் தெரிவிக்கவிரும்புகிறேன்:—1926ல் ஒரு ராயல் கமிஷன் வந்து விசாரணைசெய்து அதிக சீர்திருத்தம் இந்தியாவுக்குக் கொடுப்பதாக முன்னமே ஏற்பட்டிருக்கிறது. இனி அதற்கு மூன்று வருஷம் அதாவது ஒரே பொதுத் தேர்தல்தானிருக்கிறது. இரட்டை ஆட்சியை பல கஷ்டங்களுக்கிடையே ஒரு கட்சியார் நடத்தி வந்து ஜெயம்பெருந்தருவாயிலிருக்கிறது. அடுத்த மூன்று வருஷமும் அக்கட்சியாரே அதிகாரத்திலிருந்து வரும்பக்ஷத்தில் அடுத்த விரிவான சீர் திருத்தம் அக்கட்சியால் வந்ததென்று ஜனங்கள் கொண்டாடுவார்கள். ஆகையால் (குயவனுக்கு பல நாள் வேலை தடியடிக்காரனுக்கு ஒருநாள் வேலைஎன்றமாதிரி)

அப்படிக்கொண்டாடுவதை சகித்திருக்கமுடியாத ஒருசாரார்கள் இனி நடக்கும் தேர்தல்களில் ஓட் பெற்று மந்திரி உத்யோகம் முதலிய உத்யோகங்களைப் பெற்று, சம்பளத்தை வாங்கி பெட்டியை நிரப்பிக்கொண்டு, ஏழைத் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டு வருகிற சீர் திருத்தம் தங்களால்தான் வந்தது; ஏழு வருஷம் மற்ற கட்சியார் அதிகாரத்திலிருந்து சீர்திருத்தம் வந்ததா? நாங்கள் வந்த மூன்று வருஷத்திலேயே சீர்திருத்தம் கொண்டு வந்தோம். என்று வாய்ப்பறை படிக்க எண்ணங்கொண்டே சூட்சி நடந்து வருகிறது; இப்போது உத்தியோகம் ஏற்கமாட்டோம் என்கிறார்கள். அவர்கள் உத்தியோகம் ஏற்பதற்கு வேண்டியது ஒரு சிரமமுமில்லை. ஒரு அறையில் 3,4 பேர்கள் கூடி கால் காகிதத்தில் "தற்போது தேசமிருக்கிற நிலையில் எல்லா உத்யோகங்களையும் சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் ஏற்றுக்கொள்ள வேணுமாய் இக்கூட்டம் தீர்மானித்திருக்கிறது" என்று எழுதிவிட்டு புலிபோல் பாயவேண்டியது தானே! யார்கேட்கப் போகிறார்கள்? ஆகையால் மீண்டும் ஒருமுறை வாக்காளர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன், உண்மையாகப் பாடுபடுகிற எந்த ஒருவருக்காவது, ஒருகட்சிக்காவது உங்கள் ஓட்டைக்கொடுப்பீர்களாக.

திருப்பதி

## காணமற்போன பெண்குழந்தை

(50 ரூபாய் இனாம்]

சென்னை, பழயவண்ணாரப்பேட்டை, திருவொற்றியூர் ஹைரோடு, 347-ம் நம்பர் வீட்டைச் சேர்ந்த வியாபாரி, ஸ்ரீமான். சி. ஆர். நடேச நாயக்கரவர்கள், நமக்குத் தெரிவிப்பதாவது:— நேற்று (17—2—26) காலை சுமார் 11 மணிக்கு 2½ வயதுடையதும், 2½ அடி உயரமுள்ளதும் சிகப்பு நிறமுடையதும், இரண்டு கால்களிலும் இரண்டு வெள்ளிக்காப்பும், ஒருகாலில், வெள்ளியும், செம்பும் கலந்த [மறவட்டை] காப்புப்போட்டும், ஒருகிழிந்த வெள்ளை சொக்காய்போட்டும், அதன் வலதுபுற மூக்குத்தண்டில் ஒரு புண்ணுடையதுமான, பங்கஜம் என்ற பெண்குழந்தை காணமற் போய்விட்டது. அக்குழந்தையைக் கொண்டுவந்து சேர்ப்பவர்க்கும், அல்லது கேட்டும், பார்த்துமிருந்து விபரம் தெரிவிப்பவர்க்கு ரூ 50 இனாம் கொடுக்கப்படும்.

## சென்னிமலை மிஷன் பெண் பாடசாலை ஆண்டு விழா.

லண்டன் மிஷன் பெண்பாடசாலையின் வருஷக்கொண்டாட்டம் 13–2—26 ல வெகு விமரிசையாக நடந்தேறியது. இதற்கு ஆனரரி அஸிஸ்டண்டு ரிஜிஸ்டாரும், தாலூகா போர்டு மெம்பருமான கனம் எம். ஏ. ஆண்டமுத்து கவுண்டர் அவர்கள் அக்ராசனம் வகித்தார். கனம் பிரப்துரை, ருஜாஸ் தம்பதிகள், இங்கிலீஷ் அம்மாள் ஸ்ரீமான்கள். டி. கே, தாவணூர் B. A. L. T. சாலணப்ப செட்டியார், கச்சிமுத்து முதலியார், பழனியப்ப முதலியார் ராஜமன்னார் செட்டியார் முதலானவர்களும் அநேக ஸ்திரீகளும் விஜயம் செய்திருந்தனர். கும்மி, கோலாட்டம் முதலியவை நடந்தபின் மகா-ா--ா-ஸ்ரீ E. T. பாலகிருஷ்ண முதலியாரால், பெண்மை நெறி, என்ற விஷயத்தைப் பற்றி ஒரு உபந்நியாசம் நடந்தது. கனம் குலூஸ் அம்மாள் பிள்ளைகளுக்குப் பரிசுகளை வழங்கினர். அதன்பின் அக்ராசனர் தன் முடிவுரையில் தேச முன்னேற்றத்திற்கு பெண் கல்வி அவசியமென்றும், கல்வியை தேசமுன்னேற்றத்திற்குத் தகுந்தவாறு திருத்தி கற்பிக்கவேண்டும் என்றும், பேசிமுடித்தார். அனைவோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டு, அக்ராசனருக்கு மாலைசூட்டி வந்தனம்செய்து கூட்டம் கலைந்தது. இதற்கு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் அதிக முயற்சி எடுத்துக் கொண்டது இங்கு பாராட்டத்தக்கது

ஓர்நிருபர்

# பாலக்காட்டில் ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

பாலக்காடு விஸ்வ பாரதி வாசகசாலையாரின் அழைப்புக்கிணங்கியும், கூட்டுறவு கல்விக்கழகத்தார் அழைப்புக்கிணங்கியும், ஸ்ரீமான். ஈ.வெ.இராமசாமி நாயக்கர் இம்மாதம் 15-ந் தேதி காலை 9 மணிக்கு மங்களூர் மெயிலில் பாலக்காடு வந்து சேர்ந்தார். ஸ்டேஷனில் ஸ்ரீமான். நாயக்கரை வரவேற்க, அவ்வூர் பிரபல வியாபாரிகளும், பழம்பெரும் குடிமக்களுமாகிய பல பெரியார்களும் வாத்தியங்களுடன் வந்து வரவேற்று ஸ்ரீமான். நாயக்கரை மோட்டாரில் ஸ்ரீமான். ப. சு பழனியாண்டித் தரகரும் ஸ்ரீமான். ரெங்கய்யஞ் செட்டியாரும் பக்கத்தில் உட்கார்ந்திருக்க ஸ்ரீமான். ப. சு பழனியாண்டித் தரகரவர்கள் ஜாகைக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அன்று மாலை பெரியகடை வீதி கண்ணகையம்மன் கோவிலுக்கெதிரில் உள்ள காலி இடத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு அக்கூட்டத்திற்கு, ஸ்ரீமான் நாயக்கரையும், அக்கூட்டத்திற்கு அக்ராசனம் வகிக்கும் சாஸ்திரியாரையும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டன. ஊர்வலத்திற்கு, அந்நகர் பெரியமனிதர்களும், முக்யஸ்தர்களுமடங்கிய கூட்டமும், பல யானைகளும் வாத்தியங்களும், பஜனை கோஷ்டிகளும், ஆரவாரத்துடன் முன்சென்றன. மீட்டிங்குக்கு சுமார் 1500 ஜனங்களுக்கு மேலாகவே வந்திருந்தார்கள். மீட்டிங்கு ஆரம்பமானதும் விஸ்வபாரதி வாசகசாலை சார்பாக ஸ்ரீமான். பி. எஸ். பாரதி அவர்களாலும், கூட்டுறவுக் கல்விக்கழகத்தின் சார்பாக ஸ்ரீமான். பி. கே. மாணிக்கம்பிள்ளையவர்களாலும் உபசாரப்பத்திரங்கள் வாசிக்கப்பட்டது. பிறகு, ஸ்ரீமான். நாயக்கர் தற்கால நிலைமையைப்பற்றி நீண்ட பிரசங்கம் செய்தார். அதன் முக்கிய சாராம்சம்:—

நமது நாட்டின் தற்கால நிலைமையைப்பற்றிப் பேசுவதென்றால் நினைக்கும்போதே வேதனையாயும், துக்கமாயும் இருக்கின்றதென்றும், எவ்வளவோ பெருமையாக இருந்ததாகச் சொல்லப்படும் நமது நாடு இன்று இருந்தும் நிலை, அந்நிய ஆக்ஷிக்கு அடிமையாகி, அன்னிய ஆக்ஷியென்றால் மனிதத் தன்மைக்கு-அன்னிய-அதாவது, மனிதனுக்கு மனிதன் பிடித்துத் தின்னும் மாதிரியில், வலியவனுக்கு எளியவன் ஆகாரமாய் நடைபெற்று வருகின்றதென்றும், நமது நாட்டின் மதக்கொள்கைகளின் பலன்களில் இவ்வந்நிய ஆட்சி ஒன்றென்றும் மதத்தின் பேரால், நம்தேசத்துக்கு ஏற்பட்ட கெடுதியின் பலனே நமது நாடு இக்கெதியை அடைந்ததென்றும், ஆதலால் வெறும் ராஜீய சீர்திருத்தத்தைப் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லையென்றும், நமது மதத்தின் பேரால் ஏற்பட்ட ஜாதி வித்தியாசங்களில் மனிதர்கள் பிறவியிலேயே பிராமணன் உயர்ந்த ஜாதியானென்பதும், பஞ்சமன் தாழ்ந்த ஜாதியானென்பதும், நமது நாட்டைவிட்டு ஒழிந்தாலல்லாது நமது நாடு சுதந்தரமும், சுயமரியாதையும், சுயஆக்ஷியும் பெற்று வாழமுடியாதென்றும், தீண்டாமை யென்பது ஓர் மதத்திலும், நாட்டிலுமிருப்பது அம்மதத்திற்கே பெரிய இழிவென்றும், பிறவியிலேயே உயர்ந்த ஜாதியாரென்று ஓர் கூட்டத்தாரைக் கொண்டாடுவது, அந்த நாட்டின் சுயமரியாதைக்கும், மற்றும் பல வகுப்புக்கும் பெரிய இழிவுக்கும் ஆதாரமென்றும், ஆகலால் நமது நாட்டில் மனிதப் பிறவியில் உள்ள உயர்வு தாழ்வு வித்தியாசங்களை வேரோடு களைந்து எறிவதுதான் தேசத்துக்கும், சமூகத்துக்கும், ஓர் மனிதன் செய்யவேண்டிய முக்கிய கடமையென்றும், இவற்றை விட்டுவிட்டு ராஜாங்கத்தினிடத்தில் சட்டசபைகள் முதலிய ஸ்தாபனங்களின் மூலம் தேசத்திற்குச் சீர்திருத்தம் பெறுவேனென்று சொல்லுவது, பொது தேசசேவையாகாதென்றும், அது சுய நலம், சுஜாதிநலச் சேவையே தானாகுமென்றும், ராஜீய விஷயத்திலும் ஏதாவது சிறு பாகமாவது நமது நாட்டுக்கு உபயோகப்படும்படியாக வேலைசெய்யவேண்டுமானால், அது எல்லா ராஜீய உரிமைகளும் நமது நாட்டு சகல வகுப்பாருக்கும் சமனாய்க்கிடைக்கும்படி ஏற்பாடு செய்வதுதான் ஜாதி வகுப்பு வித்தியாசங்களின் கொடுமைகளை ஒழிக்குமென்றும், இவ்விஷயங்களில் கவலை எடுத்துக் கொள்ளாமல், பொதுவாக நாடு, நாடு என்று பேசிக்கொண்டு காலத்தைக் கடத்துவது, சுயகாரியத்தைக் கவனிப்பதேயல்லாது, நாட்டுக்கு ஒரு க்ஷேமத்தையும் விளைவிக்காதென்றும், வகுப்பு சமவுரிமைகளை அலக்ஷியம் செய்துவிட்டு, ராஜீய உரிமை என்று பேசிக்கொண்டு நடத்தப்படும் எந்தக்காரியத்தையும், சம உரிமைகள் இல்லாத வகுப்புகள் பின்பற்ற முடியாதென்றும், அவைகள் வந்து வகுப்புரிமை சமமாய் அடையும் வரையில் குறுக்கிட்டுக்கொண்டு தான் இருக்குமென்றும், ஒரு வகுப்பாரை ஏமாற்றி ஒரு வகுப்பார் முன்னேறுவதற்கான ராஜீய இயக்கங்களை தேசநல இயக்கமெனக்கொண்டு பொது மக்கள் ஏமாந்து பின்பற்றுவதும், அதற்கும் சில அறியாதார்களும், சுய நலக்காரர்களும், ஆக்கங்கொடுத்து வந்தாலும், முடிவில் அது வீழ்ந்துபோகுமென்பது உறுதியென்றும், அதற்கு உதாரணமாக ராஜீய உரிமை பெறுவதற்கு தலைசிறந்து விளங்குவதாய்ச் சொல்லப்படும் சுயராஜ்யக் கட்சியென்னும் ஓர் போலிக்கட்சி, தென்னாடு போன்ற பல இடங்களில் பாமர ஜனங்களை ஏமாற்றி வந்தாலும், அநேக இடங்களில் அதன் உண்மைதெரிந்து, அது உடைபட்டும், இழிவுபட்டும் வருகின்றதென்றும், அது வரப்போகும் சட்டசபை முதலிய தேர்தல்களில் ஆக்கம்பெற பலவித சூழ்ச்சிகளும், விளம்பரங்களும் செய்து வருகின்றதென்றும், சென்ற தேர்தல்களில் அக்கட்சி செய்த சூழ்ச்சிகளையும், வாக்குத்தவறுதல்களையும், நாணயக்குறைவுகளையும், பொது ஜனங்கள் அறிந்திருந்தும், இவ்வருடம் அவைகளை அறியாமல் மனிதர்கள் கலங்குகின்றார்களென்றும், அதற்குக் காரணம், ஸ்ரீமான். சி. இராஜகோபாலாச்சாரியார் போன்றவர்கள் இக்கட்சிக்கு அநுகூலமாய் வேலைசெய்வதுதானென்றும், ஸ்ரீமான். ஆச்சாரியார் சுயராஜ்யக் கட்சியை ஆதரிப்பதின் நோக்கமெல்லாம், சட்டசபையைப் பெரும்பாலும் பிராமணர்களே கைப்பற்ற வேண்டுமென்கிற எண்ணந்தானென்று தாம் நினைப்பதாகவும், ஸ்ரீமான். சத்தியமூர்த்தி போன்றார்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களெல்லாம், பிராமணரல்லாதாரைப்பற்றி, பிராமணரல்லாதாருக்குள்ளாகவே அருவருப்பு ஏற்பட்டு, பிராமணரல்லாத வோட்டர்களெல்லாம் பிராமணர்களுக்கே வோட்கொடுத்து, சட்டசபையை பிராமணாதிக்க சபையாக மாற்ற வேண்டுமென்கிற கருத்துக் கொண்டுதானென்றும், தற்காலச் சட்டசபைகளும், தங்கள் தங்கள் வகுப்பு நலத்தை நாடுவோருக்கு மாத்திரம் ஏதாவது கொஞ்சம் பிரயோஜனப்படுமேயல்லாமல், வேறொரு காரியத்திற்கும், அதாவது, வரிப்பளுவைக்குறைக்கவோ, மதுபானத்தை ஒழிக்கவோ உண்மையான சுயஆக்ஷி பெறவோ, ஏழைகள் பிழைக்கவோ, தரித்திரத்தை ஒழிக்கவோ, தொழிலாளர்களைக் காப்பாற்றவோ முடியாதென்றும், ஆதலால் வகுப்பு சமத்துவத்திற்கும், வகுப்புரிமைக்கும், வகுப்பு முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும் என்னும் கவலையுள்ளவர்கள், சட்டசபைக்குப் போவதாயிருந்தால், அவ்வித உண்மையைச் சொல்லிப்போவதுதான் ஒழுங்கென்றும், பொது ஜனங்களும் சட்டசபையின் மூலம் இக்காரியங்களைச் சீர்திருத்தம் செய்து கொள்ளலாமென்று நினைத்தால் வகுப்புரிமையையும், வகுப்பு சுயமரியாதையையும், பற்றி சட்டசபையில் உழைக்கிறேனென்று மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுகின்றவர்களுக்குத்தான் வோட்டுக் கொடுக்கவேண்டுமென்றும், மற்றப்படி அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று முடியாதகாரியங்களைச் சொல்லி ஏமாற்றுகிறவர்கள் வார்த்தையை நம்பி பிராமணாதிக்கத்தை நிலைநிறுத்தப்பாடுபடும் பிராமணர்களுக்கோ, அவர்கள் உதவியாலும், அவர்கள் பிரசாரத்தாலும் சட்டசபைக்குப்போய் அவர்களுக்கு அடிமையாயிருந்தும், ஆட்களுக்கோ வோட்டுக் கொடுத்து இழிவுபடாமல் ஜாக்கிரதையாயும், உங்கள் கையாலேயே கொள்ளிக்கட்டையை எடுத்து, உங்கள் தலையைச்சொரிந்துகொள்வதுபோல்இராமல் வோட்டு விஷயத்தில் நீங்கள் புத்திசாலித்தனமாயிருக்க வேண்டுமென்றும்," வகுப்புநலன், வகுப்புரிமை ஆகியவைகள் சட்டசபையிற் போய் அடையவேண்டிய அவசியம் இல்லை, வெளியிலேயே பார்த்துக்கொள்ள முடியும். "ஆதலால் தேச நலத்திற்கு தாங்கள் பாடுபடவேண்டும்" என்கிற எண்ணம் யாருக்காவது இருக்குமானால், அவர்கள் கண்டிப்பாய் சட்டசபையைப் பகிஷ்காரம் செய்துவிட்டு கதர் அணிவதிலும், கதர் உற்பத்தி செய்வதிலும், தீண்டாமையை ஒழிப்பதி

னும் பிரயத்தனப்படவேண்டுமென்றும், கதரை நாம்கை விட்டுவிட்டு அந்நியதுணியை ஆதரித்ததினுற் தான் நமது நாட்டில் பெரும்பாலும் தொழிலாளிகளாயிருக்கிற ஏழைகளுக்குத் தொழிலற்றுப்போய் விட்டதென்றும், ஓர் காலத்தில் இந்திய ஸ்திரீ தர்மத்தைப்பற்றி எவ்வளவோ பெருமையாய் எழுதிவைத்துக்கொண்டும் பேசிக்கொண்டுமிருந்த, இந்திய ஸ்திரீ தர்மம் மிகவும் இழிவான நிலையிலிருக்கிறதென்றும், கற்பு என்பது நமது நாட்டுப் பெரும்பான்மையான ஸ்திரீகளுக்குக் காக்கப்படாதகடினதத்துவமாய்ப்போய்விட்டதென்றும், ஜீவனத்திற்காக விபசாரம் செய்யவேண்டிய ஸ்திரீகள் நமது நாட்டில் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருவதற்கு, நமது நாட்டுக் கைராட்டினங்கள் அருகிப்போனதுதான் காரணமென்றும், தொழிலாளிகளின் தரித்திரத்தைஒழித்து ஸ்திரீகளின் தர்மத்தைக் காப்பாற்ற வேண்டுமானுல், கதரைக் கைக்கொண்டல்லாமல் வேறு ஒரு சாதனத்தாலும்முடியாதென்றும், நமது நாட்டுப்பெருமையை ஒழித்து, ஸ்திரீ தர்மங்களை அழித்து, தொழிலாளர்களையும்—ஏழைகளையும் பட்டினிபோட்டு, நாம் இக்கெதியில் இருப்பதற்குக் காரணம், நாம் சர்க்கார் பேரிலேயே சொல்லுவது முழுதும் உண்மையாகாது என்றும், சர்க்காரிடம் ஒருபாகம் இருந்தபோதிலும், பெரும்பாகம் நாமே தான் காரணமாயிருந்துவருகிறோம் என்றும்,

நாம் எல்லோரும் கதர் உடுத்துவதாயிருந்தால் நமது சர்க்காருக்கு, நமது நாட்டின் பேரில் இவ்வளவு ஆசையிருக்காது; நமது ஜனங்களும் இவ்வளவு பட்டினி கிடக்கமுடியாது; நமது நாட்ப்பொருள்களும்அந்நிய நாட்டுக்குக்கொள்ளைபோகாது. உதாரணமாகஒருமனிதன் பன்னிரெண்டு அணுவுக்கு ஒருகெஜம் அந்நிய நாட்டு மல்துணி வாங்குவானேயானுல், அவன் 10 அணு 9 பையை, நமது நாட்டிலிருந்து அந்நிய நாட்டுக்கு அனுப்பிக்கொடுத்து 10 அணு 9 பை செலவில் தங்கள் வாழ்நாளைக் கழிக்கக்கூடிய இரண்டு குடும்பத்தை நமது நாட்டில் பட்டினி போட்டதற்கு பொருப்பாளியாகிறுன் என்றும், ஒருகெஜம் மல்லில் உள்ள பஞ்சின் விலை ஒன்றேகால் அணுத்தான் பெறும், பாக்கி பத்தேமுக்காலணுவும் அதன் நூல் நூற்பதற்கும் நெசவுக்குமாகவும் அந்நியநாட்டினருக்கு கொடுக்கிறோம். அந்த நூற்றல்வேலையை நமதுசகோதரிகளுக்குக் கொடுத்து, அந்த நெசவு வேலையை நமது சகோதரர்களான நெசவுக்காரர்களுக்குக் கொடுத்திருந்தால், இந்த இரண்டு குடும்பங்களும் ஒருநாள் காலத்தைக் கழித்திருக்குமா? அல்லவா? ஒரு கெஜம் அந்நிய நாட்டுத்துணி வாங்குவதினுலேயே ஒருநாளைக்கு 2 குடும்பங்களைப் பட்டினி போடத்தகுந்த பணத்தை அந்நிய நாட்டுக்கு அனுப்புகின்றோமென்றுல், நீங்கள் அணிந்துகொண்டிருக்கும் இவ்வளவு துணிக்கும், நீங்கள் வருடமெல்லாம் வாங்கும் கோடிக்கணக்கான கெஜத்துணிக்கும், எவ்வளவுபேரைப் பட்டினிபோட்டிருக்கின்றீர்களென்று கவனித்துப் பாருங்கள், எவ்வளவு ஸ்திரீகளை தொழிற்செய்ய வகையில்லாமல் தெருவில் முடுக்கி, அவர்களின் கற்பை இழக்கக்கட்டாயப்படுத்துகின்றீர்களென்பதை நினைத்துப்பாருங்கள் என்றும்,

ஆதலால் மடங்கள் கட்டுவதும், அன்னதானம் செய்தும் மடாதிபதிகளென்போருக்குப் பணத்தைக்கொடுத்து, சோம்பேறிகளுக்குப் பொங்கிப்போடச்செய்து, அவர்கள் காலைக்கழுவின தண்ணீரைத் தீர்த்தமென்று உட்கொள்ளுவதும், புண்ணியமும் மோட்சமும், அன்னதானமும் ஜீவகாருண்யமும், பாவமன்னிப்பும் ஒருக்காலும் ஆகவேஆகாது என்றும்,

ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் கதரை ஆதரித்து, தேசத்தைக்காப்பாற்ற வேண்டுமென்றும் சொல்லி, தேவஸ்தான ஆக்டைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லவேண்டுமென்று, காரியதரிசி, ஸ்ரீமான், மாணிக்கம்பிள்ளை அவர்கள் கட்டளையிடுவதால், அதைப்பற்றியும் சிலவார்த்தைகள் சொல்லுகின்றேனென்றும் சொல்லி, மேலேபேசியதாவது:—

சிலர்உங்களை ஏமாற்றி தேவஸ்தான ஆக்டானது. இந்துமதத்திற்கே பெரியஆபத்து; இந்துமத தர்மஸ்தாபனங்களிலும், இந்து மத தத்துவத்திலும் சர்க்காரார் பிரவேசித்துவிட்டார்கள்; ஜஸ்டிஸ் கட்சியாரென்று சொல்லப்படும் பிராமணரல்லாத மந்திரிகள் அதற்கு இடங்கொடுத்து மதத்துரோகிகளாகி விட்டார்கள். அவர்களை அந்த ஸ்தானத்தைவிட்டு அகற்றிவிட்டு தேவஸ்தான சட்டத்தை அழிக்கக்கூடியவர்களுக்கும், அழிப்பதாய்ச்சொல்லி வாக்குறுதி கொடுக்கிறவர்களுக்குமே நீங்கள் வோட்டுக்கொடுத்து அவர்களைச்சட்டசபைக்கு அநுப்பவேண்டுமென்றும், மற்றும் பல மாதிரியாகவும் பலர் சூழ்ச்சிப்பிரசாரம் செய்துவருகிறுர்கள்.

பிராமணரல்லாதாரிலேயும், பலர் இதை நம்பிக்கொண்டும், சிலர் பிராமணர்களிடத்தில் பணம் வாங்கிக்கொண்டும், அவர்கள் தயவை எதிர்பார்த்துக்கொண்டும், இதேமாதிரி சொல்லிக்கொண்டு திரிகிறுர்கள். நீங்கள் இவற்றைக் கொஞ்சமும் நம்பக்கூடாதென்றும், முதலாவது நமது தர்ம ஸ்தாபனங்களும், மடாதிபதிகளும், யோக்கியமாய் நடந்து வருகின்றுர்களாவென்பதை நீங்களே யோசித்துப் பார்க்கவேண்டுமென்றும், மதத்தை உத்தேசித்துத் தர்மஸ்தாபனங்களின் பேரால் இந்து மடாதிபதிகளுக்கும், இந்துக் கோயில்களுக்கும், வருடம் ஒன்றுக்கு 2கோடி ரூபாய் வரும்படி வருகிறதென்றும், இந்த 2 கோடி ரூபாயில் பெரும்பாகம் தாஸி—வேசிகளும், கள்ளு—சாராயமும், வக்கீல்களும்-கோர்ட்டுகளும், சோம்பேறி பிராமணர்களும், மற்றும் உபயோகமற்ற ஆட்களும், சாப்பிட்டுக்கொண்டு, இந்து மதத்தின் பெருமையையும், பிராமணரல்லாதாரின் சுயமரியாதையையும்அழித்துஇழிவை உண்டாக்கவும் உபயோகப்படுகின்றதேயல்லாமல், தேசத்திற்காவது மதத்திற்காவது, தமிழ்நாட்டில் உரிமையுள்ளவர்களும், பெரும்பான்மையானவர்களுமான பிராமணரல்லாதாருக்காவது, எள்ளளவு பலன் படுகிறதா? இவற்றைக் காங்கிரஸ் ஏற்பட்ட காலமுதற்கொண்டே, அதாவது, 30, 40 வருடக்காலமாகவே நம் நாட்டவர் அறிந்து, காங்கிரஸ்களிலேயும், மாகாண ஜில்லா தாலூகா மகாநாடுகளிலேயும் தேவஸ்தான ஆக்ட்டு ஏற்படுத்தும்படி பிரேரேபனைகள் கொண்டுவந்து, சர்க்காரைக்கேட்டுக்கொண்டு வந்திருக்கின்றுர்கள். என்றும், இந்த இரண்டு கோடி ரூபாயும் வரும்படி வருவதற்குப் பொது ஜனங்கள்எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதித்துக் கொடுத்திருக்கவேண்டும், கொண்டுவந்து கொடுப்பவர்கள், எவ்வளவுசெலவு செய்துகொண்டு—கஷ்டப்பட்டுக்கொண்டுவந்து கொடுத்திருக்கவேண்டும். உதாரணமாக, திருப்பதி தேவஸ்தானத்திற்கு வருஷத்தில் சுமார் 20 லக்ஷம் ரூபாய் வரும்படி வருகிறது. இந்த 20 லக்ஷம் ரூபாயும், இமயமலை முதல், கன்னியாகுமரிவரையிலுமுள்ள இந்துக்களால் வழிச்செலவு செய்து கொண்டுபோய், கால்—அரை—ஒன்று—பத்து—நூறு—ஆயிரம்—பதினுயிரமாக இந்து "மதபக்தர்கள் என்போர்களால் செலுத்தப்படுவது. இப்படிச்செலுத்த செலவுதொகை 20 லக்ஷத்துக்குக்குறையாமல் 30 லக்ஷமென்று கூடச் சொல்லலாம். ஆக திருப்பதி கோவிலுக்காக மாத்திரம், இந்துக்களுடைய பணம் இந்துமதத்தின் பேரால் வருடம் ஒன்றுக்கு 50 லக்ஷம் செலவாகிறதென்றுல், இன்னும் மற்றுமுள்ள கோவில்களுக்கும், நதிகளுக்கும் ஆக எவ்வளவு கோடி ரூபாய் செலவாய்க் கொண்டிருக்கும். ஒட்டு மொத்தம் கணக்குப்பார்த்தால் "தமிழ் நாட்டில் மதத்திற்காகக் கோயில்களுக்கும், வைதிகச் சடங்குகளுக்கும், பிராமணர்களுக்காகவும், இந்துக்களால் செலவு செய்யப்படும் பணம், சர்க்காரால்வசூல்செய்யப்படும்வரிவசூல் பணத்திற்கு கூடுதலாயிருக்குமே தவிர, குறையாதென்பதுதான் எனது அபிப்பிராயம். 'எப்படியென்றுல், ஒருவிதத்திலும் சர்க்காருக்குக் காலணுக்கூட வரிகொடுக்க அவசியமில்லாதவன், மதத்தின் பேரால் கோவிலுக்கும், வைதிகச் சடங்குகளுக்கும், குருக்களுக்கும்-மடாதிபதிகளுக்குமாக, 1-10ரூபாய்கணக்காக ஏறக்குறைய ஒவ்வொருவருமேசெலவு செய்துகொண்டுதான் வருகிறுர்கள். ஆகையால் சர்க்கார் வரியைவிட, மதவரி அதிகமிருக்குமென்பதில் நீங்கள் யாரும் ஆச்சரியபடமாட்டீர்களென்றும், இப்படிச்செலவு செய்தும், மதம் என்றுல் என்ன; தெய்வம் என்றுல் என்ன; புண்ணியபாவம் என்றுல் என்ன; என்பது கூடத்தெரிவதற்கில்லாமல், பிராமணனை வணங்கிக்கொண்டு, அவன் சொற்படியும், அவன் எழுதிவைத்த புத்தகத்தின் படியும் நடப்பதுதான் இந்து மதமென்றும், பிராமணன் தனது வரும்படிக்காகக் காட்டிக்கொடுத்து பூஜைசெய்வதுதான் தெய்வமென்றும், அவன் பிழைக்கவழி ஏற்படுத்துவதுதான் கோயிலென்றும், பிராமணனுக்குக் கொடுப்பதுதான் புண்ணியமென்றும், அவனுக்குக் கொடுக்கக் கூடாதென்றுசொல்லுவதுதான் பாவமென்றும், அறிந்துகொண்டிருக்கின்றோமே யல்லாமல், இவ்வறிவுக்கே இவ்வளவு பணச்செலவும் உபயோகப்படுகிறதே அல்லாமல், உண்மையில் ஆத்மார்த்தத்திற்கென்று சொல்லப்படும் இந்து மதத்திற்கு ஏதாவது பிரயோஜனப்படுகிறதா?

இந்து மதமேஇன்னதென்று, இந்துகளிலேயே 100 க்கு 99¾ இந்துக்களுக்கு இன்னமும் தெரியவே தெரியாது. ஒரு மகமதியரை மகமதிய மதம் என்னவென்றுகேட்டால் தங்களுடைய மதத்திற்குமகமது நபி ஆதார புருடரென்றும், மகமதுவின் கற்பனைப்படி நடப்பதென்றும்; மகமதுவைப்பின் பற்றுவதென்றும், சொல்லுவார்: ஒரு கிருஸ்தவரைக்கேட்டால் தங்கள் மதத்திற்கு கிறிஸ்து நாதர் ஆதார புருஷரென்றும், கிருஸ்துவைப்பின்பற்றுவதென்றும் கிருஸ்துவின் கற்பனைப்படி நடப்பதென்றும் சொல்லுவார். அதுபோல் ஒரு இந்துவைக்கேட்டால், தங்கள் மதத்திற்கு

தாங்கள் யாருடைய கற்பனைப்படி நடக்கிறதென்றும், யாருடைய கற்பனையைப் பின்பற்றுகிறார்களென்றும், தங்களுக்கு யார் மதகர்த்தா வென்றும், சொல்லுவதற்கோ, தெரிந்தவர்கள் இருக்கிறார்களாவென்றும், தாங்கள் யாரைப் பின்பற்றுகிறோமென்றும், தாங்கள் யார் கற்பனைப்படி நடக்கின்றோமென்றும் சொல்லத்தகுந்தவர் 1000—ல் ஒருவர்கூட இருப்பதாகச் சொல்லமுடியாது. ஆனால்'' இதெல்லாம் நமக்கெதற்கு; ஐயர் சொன்னால்சரி; என்றும், அதெல்லாம் கேட்பது கூடப் பாவமென்றும்'' சொல்லத்தான் கற்றிருக்கிறார்கள். இப்படிக் கோடிக்கணக்கான ரூபாய் மதத்திற்காகவும் மதத்தினர்களால்செலவு செய்யப்பட்டு விட்டு, மதம் இன்னதென்றே அறியாதிருப்பார்களானால்; அம்மதம் எப்படி ஒரு தேசத்தில் நிலைத்திருக்க முடியும்? இம்மாதிரி மதத்திற்குக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணம், தூங்காமலும், சாப்பிடாமலும், பட்டினி கிடந்துகொண்டு அநாவசியமாய் ஏன் செலவுசெய்யப்படவேண்டும்? மதத்திற்காகச் செலவு செய்து பாப்பான குடும்பங்கள் நமது நாட்டில் வருடத்திற்கு வருடம் எவ்வளவு வளர்ந்துகொண்டு வருகின்றது. வைதீகச் சடங்குகளுக்காகச் செலவு செய்து பாப்பாரக் கொண்டுவரும் குடும்பங்கள் எவ்வளவு வளர்ந்து கொண்டு வருகின்றது. இவற்றைப்பற்றி இதுவரையாரா கவனித்திருக்கின்றார்கள்? இவற்றையெல்லாம் உணர்ந்து தான் தற்கால முன்னாள் பிராமணரல்லாத மந்திரிகள் பிரயத்தனப்பட்டு தேவஸ்தானச்சட்டமென்பதாக ஓர் சட்டம் உண்டாக்கியிருக்கிறார்கள். அச்சட்டத்தில் குற்றமுள்ள பாகம் இன்னதென்று இதுவரையில் ஒருவராவது எடுத்துக்காட்டவேயில்லை. வீணாக மதம்போச்சு, மதம்போச்சு, என்று சத்தமிடுகின்றார்களே யல்லாமல் குற்றமென்ன வென்று சொல்லுவதைக் காணோம். பாமர ஜனங்களையும், ஜஸ்டிஸ் கக்ஷியார் இந்தச்சட்டத்தைச் செய்தனர் என்கிற காரணத்திற்காகச் சட்டத்தைச் சந்தேகிக்கும்படி சிலபிராமணர்களும், பிராமணப்பத்திரிகைகளும் பிரசாரம் செய்து வெற்றிபெற்று வருகின்றனர். ஏனெனில், ஜஸ்டிஸ்கட்சி என்றாலே அதுதேசத்துரோகக்கட்சி என ஜனங்கள் நினைக்கும்படியாக பிராமணர்களும் அவர்களால் கீர்த்திபெற்று வயிறு வளர்க்கும்பிராமணரல்லாதாரும் பொய்ப்பிரசாரம் செய்து ஜஸ்டிஸ்கட்சியார் பேரில் ஒருவிதத் தப்பபிப்பிராயத்தை ஜனங்களுக்கு உண்டாக்கிவைத்துவிட்டபடியால், பாமர ஜனங்களும் ஏமாந்து நம்பிவிடுகின்றார்கள்.

இதனால் ஜஸ்டிஸ் கட்சியாரால் நமது நாட்டுக்கு விளைந்திருக்கும் நன்மைகளும்,மறைந்து போவதோடல்லாமல், அதையே ஜனங்கள் விரோதமாக நினைக்கும்படியும் ஏற்பட்டுவருகின்றது. [illegible] இந்தச் சட்டத்தின்படி தர்ம சொத்துக்களைப் பிராமணர்களேதான் சாப்பிட வேண்டுமென்பதும், பிராமணர்களுக்குக் கொடுத்தால்தான் புண்ணியமென்பதும், பிராமணர்கள்தான் [illegible] தத்துவத்தை அறியலாமென்பதும், பிராமணர்கள்தான் வேதம் முதலியவை படிக்கலாமென்பதும், பிராமணன்தான் சாமியைத் தொடலாம், அவனுக்குப்பணம் கொடுத்தால்தான் சாமி தயவு சம்பாதிக்கலாமென என்னும் மூடநம்பிக்கைகள் நமது நாட்டிலொழிந்துபோய்விடும் ஆதலாற்றான் பிராமணர்கள் இதையெதிர்க்கிறார்கள்; சட்டசபைகளிலும் இதை ஒழிப்பதற்குப் பிரயத்தனப்படுகிறார்கள்; ஹைகோர்ட்டிலும் விபாஜ்யம் தொடுத்திருக்கின்றார்கள்; மடாதிபதிகளென்போர்களிலும், ஆச்சாரியார்களென்போர்களிலும்; லோகதுரு வென்போர்களிலும், பலர் இப்பிராமணர்களுக்குப் பணத்தைக் கொடுத்துச் சீர்மைக்கு அநுப்புவதும், சட்டசபையில் ஸ்தானம் சம்பாதிப்பதற்காக வோட்டர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்கும்,பிரசாரர்களுக்குப்,பிராமணர்களுக்கு வோட்வாங்கிக்கொடுப்பதற்காகச் செலவுக்கும் பணம் கொடுத்துக்கொண்டும் வருகின்றார்கள். ஆதலால் நீங்கள் இவற்றைக்கண்டு ஏமாந்துபோகாமல் உங்களிடத்தில் யார்வந்து வோட் கேட்டாலும், உங்களுக்குக் கொடுக்க இஷ்டமிருக்கும்பக்ஷத்தில் தேவஸ்தான ஆக்டைக் கெடுக்காமல், காப்பாற்றுகிறோமென்று பார் செல்லுகின்றார்களோ, அவர்களிடம் பிரமாணம் வாங்கிக்கொண்டு, அவர்களுக்கே வோட் கொடுக்கவேண்டுமென்றும், அப்படிக்கில்லாமல் ஏமாந்து நீங்கள் உங்களுடைய வோட்டைக்கவலைபற்றுப் பொய்ப்பிரசாரங்களைக்கண்டு ஏமாந்து அநுவசியமாய் உபயோகப்படுத்திவிடுவீர்களேயானால் பின்னால் உங்கள் தேசத்திற்கும், மதத்திற்கும், சமூகத்திற்கும் பெரிய ஆபத்து ஏற்படுவதோடு, நீங்களும் தீண்டாதார்களாகி விடுவீர்களென்பதை ஞாபகப்படுத்துகிறேன் என்றும், தீண்டாமையைப்பற்றியும் மதுபானத்தைப்பற்றியும் நாளையதினமும் பேசவேண்டுமென்றும் பலர் கேட்டுக்கொள்வதால் நாளைக்கும் பேசக்கூடுமென்று சொல்லி முடித்தார்.

அக்கிராசனம் வகித்த சமஸ்கிருத பண்டிதரான சாஸ்திரியார் உபன்யாசகர் சொன்னவைகளைத் தக்க மேற்கோள்களுடன் ஆதரித்து இந்துமதத்தில் பிறப்பில் உயர்வு தாழ்வு உண்டு என்று யாராவது வேதத்தின் மூலமாகவோ சுருதிசாஸ்திரம் இவைகள் மூலமாகவோ ருஜு செய்பவர்களுக்கு தான் அடிமையாயிருப்பதாகவும் பந்தயம் கூறினார்.

—

# சுயராஜ்யக் கக்ஷியின் வேஷமும், ஜஸ்டிஸ் கக்ஷியாரின் மனச்சாக்ஷியும்.

—

சென்னை கார்ப்பொரேஷனிலிருக்கும் சுயராஜ்யக் கக்ஷி அங்கத்தினர்கள் தங்களுக்கு நம்பிக்கையில்லாததும், தாங்கள் செய்யாததும், தாங்கள் எதிர்ப்பதுமான கதர், ராட்டினம் என்னும் விஷயங்களைக் கார்ப்பொரேஷனுக்குள் புகுத்தி, பிராமணரல்லாதார்பேரில் பழியையும் வெறுப்பையும் பொது ஜனங்களுக்கு உண்டாக்குவதற்காக, பல தந்திரங்கள் செய்கின்றார்கள். அதாவது கார்ப்பொரேஷன் சிப்பந்திகள் கட்டாயமாகக் கதர் உடுத்தவேண்டும் என்கிற ஓர் தீர்மானத்தையும், கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளெல்லாம் கைராட்டினம் சுற்றவேண்டுமென்கிற தீர்மானத்தையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். இவ்விருதீர்மானங்களையும் சுயராஜ்யக் கட்சியார் தங்கள் திட்டத்தில் ஒன்றாய் ஒப்புக்கொள்ளுவதுமில்லை; தாங்களும் நடையாக்கையில் செய்வதுமில்லை. கதரைப்பற்றிக் கார்ப்பொரேஷன் சபைக்கு வரும்போது மாத்திரமும், வோட்டுக்குப் போகும் மாத்திரமும்தான் கதர் கட்டிக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ராட்டினத்தைப்பற்றி யோசிக்கவில்லை, அதை [illegible] விட்டுவிட்டார்கள். இப்படி இருக்க, இதைகார்ப்பொரேஷன் சிப்பந்திகளுக்குக் கட்டாயப்படுத்த சுயராஜ்யக் கக்ஷியாருக்கு யோக்கியதை ஏது?

அப்படி இவர்கள் ஏதாவது தீர்மானம் கொண்டுவருவதாயிருந்தாலும், சம்பளம் வாங்கும்போது மாத்திரம் கதர் கட்டவேண்டுமென்று தீர்மானித்தால் அது சுயராஜ்யக் கொள்கைக்கு யோக்கியமானதாயிருக்கும்! அப்படிக்கில்லாமல், தாங்கள் மாத்திரம் வேஷத்துக்குக்கதர்கட்டவேண்டும்; சிப்பந்திகள்மாத்திரம் எப்போதும் கதர்கட்டவேண்டுமென்று சொன்னால், குடிகாரர்கள் மதுவிலக்குப்பிரசாரம், செய்வதுபோலிருக்கின்றது; ராட்டினத்தைப்பற்றியும், இவர்கள் தீர்மானம் செய்வது, தாங்களும் ராட்டினம் சுற்றாமல், ராட்டினச்சங்கத்தில் தாங்கள் மெம்பராக இல்லாமல், தங்கள் பிள்ளைகளும் ராட்டினம் சுற்றாமல், ராட்டினம் சுற்றுகிறவர்களையும் பார்த்துச் சிரித்துக்கொண்டும், பரிகாசம் செய்துகொண்டும், பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளை ராட்டினம் சுற்றக் கட்டாயப்படுத்துவது. விபசாரிகள் கற்புப்பிரசாரம் செய்வதுபோலிருக்கின்றது.


எனினும், இம்மாதிரியான தீர்மானங்களைப் பொது ஸ்தாபனங்களில் கொண்டுவருவதின் கருத்து, இவர்களைப்போல் வேஷம்போட இஷ்டமில்லாத ஜஸ்டிஸ் கட்சி முதலிய பிராமணரல்லாத மெம்பர்கள் தங்கள் மனச்சாக்ஷியை எதிர்த்துச்சொல்வதன்மூலம், ஜனங்களுக்கு அவர்களிடம் ஒரு வெறுப்பை உண்டாக்குவதற்குக் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் சூழ்ச்சியென்பது கடுகளவுள்ள ஞானமுள்ளவர்களுக்கும் நன்றாய் விளங்கும். எப்படியென்றால், காங்கிரஸில் கதரையும், ராட்டினத்தையும் கட்டாயமாக மகாத்மா பிரேரேபிக்கும்போது, ஸ்ரீமான்கள், மோதிலால் நேரு, சீனிவாசய்யங்கார், ரெங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி முதலிய பிராமணர்கள் எதிர்த்துப்பேசி அத்தீர்மானத்தைத் தோற்கடித்தது தேசபக்தியும், மனச்சாக்ஷியும்படி நடந்ததாயும் ஆகிவிடுகிறது! கார்ப்பொரேஷன்கூட்டத்தில் ஸ்ரீமான்கள் டி. வரதராஜுலு நாயுடு, சுந்தரராவ் நாயுடு, ஓ. தணிகாசல செட்டியார் முதலிய பிராமணரல்லாதார்கள் எதிர்த்தது, தேசத்துரோகமும், அக்கிரமமும் ஆகிவிடுகிறது! இதை யோசிக்கும்போது நமது நாட்டு ராஜிய வாழ்வுபிராமணர்கள் செய்வதெல்லாம் தேசபக்தியென்று சொல்வதாகவும், பிராமணரல்லாதார் செய்வதெல்லாம் தேசத்துரோகமென்று சொல்வதாகவும் ஏற்பட்டுவிட்டதாகத்தான் நிர்மானிக்க வேண்டும். அதோடல்லாமல் பிராமணரல்லாதாரிலேயே சிலபேர் இவற்றை ஆதரிக்கவும், இவ்வித பிராமணர்களுக்குச் செல்வாக்குத் தேடிக்கொடுக்கவும் பிராமணர்கள் வாலைப் பிடித்துக்கொண்டும்,கவி பாடிக்கொண்டும் திரியவும், அவர்கள் செய்வது சரி, சரியென்று தங்கள் பத்திரிக்கைகளில் முழக்கம் செய்யவும் தயாராயிருக்கும்போது நாம் யாரை நோவது?

—

## மன்னிக்கவேண்டும்.

அச்சுயந்திரம் ஒடிந்துபோனதால் சென்ற வாரப்பத்திரிக்கை அனுப்பமுடியாமல் போய்விட்டதுபற்றி சந்தாதாரர்கள் மன்னிக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

ஈ. வெ. ராமசாமி.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துள்ள பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

குரோதன-௵ மாசி-௴ கஎ-உ

## ஏமாற்றுப்பிரசாரம்

ஸ்ரீமான்கள் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் காந்தியின் பிரதிநிதியென்கிற பேரைச்சொல்லிக் கொண்டும், திரு. வி. கலியாண சுந்திரமுதலியார் பிராமணரல்லாதார் பிரதிநிதி என்கிற பெயரைச் சொல்லிக்கொண்டும், ஸ்ரீமான்கள் எ.ரெங்கசாமி ஐயங்கார், எஸ். சீனிவாசய்யங்கார் எஸ். சத்தியமூர்த்தி ஆகியவர்கள் சுயராஜ்யக்கட்சியின் பேரைச் சொல்லிக் கொண்டும்,காங்கிரஸ் சார்பாக தேசத்திற்கு நன்மைசெய்கிறவர்கள்போல் நடித்து, நமது நாட்டில் ஏமாற்றுப்பிரசாரம் செய்துவருகின்றார்கள். அப்படிச் செய்வதிலும், இவர்கள் சொல்லிவரும் விஷயங்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாததாய், கொஞ்சம் புத்தியுள்ளவனும் இவர்களுடைய புரட்டுகளை அறிந்துகொள்ளக்கூடிய மாதிரியில், பேசிவருவது நமக்கே ஆச்சரியமாய் இருக்கின்றது. அதாவது:—

பிராமணர்களின் கக்ஷியாகிய தமிழ்நாட்டு சுயராஜ்யக்கட்சிக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்கும் விஷயத்தில், "பிராமணரல்லாதார் பிரதிநிதியான" முதலியார் சுயராஜ்யக் கட்சியார் சட்டசபையில் ஒத்துழையாமை செய்வார்கள்; ஆதலால் அவர்களுக்கு வோட்டுக் கொடுங்களென்கிறார்,ஸ்ரீமான் ஆச்சாரியாரோ சுயராஜ்யக் கட்சியார் சட்டசபையில் மதுவிலக்கு செய்வார்கள்; ஆதலால் அவர்களுக்கு ஓட்செய்யுங்கள் என்கிறார். சுயராஜ்யக்கட்சியாரோ, உத்தியோகமும் ஒப்புக்கொள்ள மாட்டோம் வெளியிலும் வந்துவிடுவோம் என்கிறார்கள்.காங்கிரசோ சர்க்காரிடம் இந்தியாவின் சார்பாய் ஓர் சீர்திருத்தத்திட்டம் கொடுத்து அதை ஒப்புக்கொள்ளச் செய்யப்பார்ப்பது; சர்க்கார் 'ஒப்புக்கொள்ளாவிட்டால், உடனே சட்டசபையை விட்டு வெளியே வந்துவிடவேண்டியது என்று கட்டளையிட்டிருக்கிறது. சர்க்காரோ, இந்தியா சட்டசபையில் சீர்திருத்த சம்பந்தமாய் நிறைவேறின ஓர் தீர்மானத்தை, நிராகரித்து குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டதோடல்லாமல், சென்றவாரம் இராஜாங்கசபையிலும்" உங்கள் திட்டத்தைஏற்றுக்கொள்ளவும் முடியாது' உங்களுக்கு நல்லபுத்தி வரும்வரை உங்களைப்பற்றிக் கவனிக்கப்படவும் மாட்டாது" என்று சொல்லியாகிவிட்டது, இந்த நிலைமையில், சட்டசபையில் வோட்டுக்கேட்பதின் கருத்தென்னவென்பதை. வாசகர்கள்தான் உணரவேண்டும்.

ஸ்ரீமான். முதலியார் சொல்லுகிறபடி சட்டசபையில் ஒத்துழையாமை செய்வதாயிருந்தால், ஒருதடவை சுயராஜ்யக் கட்சியாரின் திட்டத்தை நிராகரித்தும், சென்ற வாரத்தில் இராஜாங்க சபையில் இந்தியர்கள்,எவ்வித சீர்திருத்தத்துக்கும் லாயக்கில்லை யென்றும், உங்களுக்குப் புத்திவரும் வரை ஒன்றும் கொடுக்கப்படமாட்டாதென்றும் சர்க்காரார் சொன்ன பிறகுகூட, சுயராஜ்யக்கட்சியார் சட்டசபைக்குப் போக ஓட்டு வாங்கிக் கொடுப்பதற்கு ஏன் ஊர், ஊராய்த் திரிகிறாரோ நமக்கு விளங்கவில்லை, நமது முதலியாருடைய அகராதியில் உதைத்த காலுக்கு முத்தமிட்டுப் பல்லைக்கெஞ்சுவது தான் ஒத்துழையாமைக்கு அர்த்தம் போலிருக்கிறது.

ஸ்ரீமான். ஆச்சாரியார் சொல்லுவது அதைவிட வேடிக்கையாயிருக்கிறது. "திடீரென்று சட்டசபையை விட்டு வெளியே வந்துவிடுவதையும், ஒத்துழையாமை உணர்ச்சி உள்ளவர்களையும், உத்தியோகம் ஒப்புக்கொள்ளாதவர்களையும்," வைத்துக்கொண்டு,அவர்களுக்கு வோட் வாங்கிக்கொடுத்து,சட்டசபையில் எப்படிக் கள்ளை நிறுத்த முடியுமோ நமக்குப் புரியவில்லை. கள்ளை நிறுத்த வேண்டுமென தீர்மானம் கொண்டு வருவதாயிருந்தால் அதன் வரும்படியில் நடைபெறும் சர்க்காருக்கு அதனாலேற்படும் நஷ்டத்துக்குத் தகுந்தபடி வரவு—செலவு திட்டம் போட்டுக்கொடுக்க வேண்டும்; கள்ளை நிறுத்தும் தீர்மானத்தையும், வரவு—செலவுத் திட்டத்தையும் சர்க்காரார் ஒப்புக்கொள்ளவேண்டும்; அவ்விலாக்காக்களை நடத்த உத்தியோகங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்; இவ்வளவிற்கும் இவர்கள் சம்மதித்தாலும், சர்க்காரார் பூரண மதுவிலக்கை ஒப்புக்கொள்ளவேண்டும்; அதற்காக இவர்கள் திட்டத்தை ஒப்புக்கொள்ளவேண்டும்; 'இவர்களுககு உத்தியோகம் கொடுக்கவும் சம்மதிக்கவேண்டும்; இவ்வளவும் நடப்பதாயிருந்தாலும் சீர்திருத்த திட்டத்தைச் சர்க்காரார் 'ஒப்புக்கொள்ளாவிட்டால் இவர்கள் வெளியிலும் வந்துவிடவேண்டும். இப்படியிருக்க சுயராஜ்யக்கட்சியார் மதுவிலக்கைச்செய்து விடுவார்கள்! என்று சொல்லுவது, எப்படி ஜனங்கள் நம்புவார்களென்று இவர் நினைக்கின்றாரோ தெரியவில்லை. ஸ்ரீமான், ஆச்சாரியார் அகராதியில்,அண்டப் புரட்டோ, ஆகாசப்புழுகோ சொல்லி பிரமணரல்லாத வோட்டர்களை ஏமாற்றி, வோட்டு வாங்கிக்கொடுத்து, மதுவருந்தும்—மதுவிற்கும்—மதுஉற்பத்தி செய்யும்-சட்டசபை மூலம் மது ஒழிக்கமுடியாது என்று சொல்லும் பிராமணர்களையும், பிராமணர்கள் தாளத்துக்குத் தகுந்தபடி ஆடும் சில பிராமணரல்லாதாரையும், சட்டசபையில் நிரப்பி பிராமணரல்லாதாரை ஒடுக்கி ஒழித்துப் பிராமணாதிக்கத்தை நிலைநிறுத்தப் பார்ப்பதுதான் மதுவிலக்குப்பிரசாரம் என்பதற்கு அர்த்தம்போலும்.

"ஜஸ்டிஸ் கட்சியாரும், மிதவாதக்கட்சியாரும், சுயேட்சைக் கட்சியாரும், ஒத்துழைப்புக்காரர்கள்; நாங்கள் பரஸ்பர ஒத்துழைப்புக் கூடச்செய்ய மாட்டோம், 'கவர்ன்மெண்டுக்கு தோல்விமேல் தோல்விஏற்படுத்தி விடுவோம். எங்கள் சொற்படி சர்க்கார் கேட்காவிட்டால், சட்டசபையை விட்டு விலகி வந்துவிடுவோம்; உத்தியோகம் ஏற்கமாட்டோம்; இரட்டை ஆட்சி உள்ள சட்டசபையில் அதிகாரமும்இல்லை; பொருப்பும் இல்லை; வீண்சண்டைக்கும் கட்சிக்கும், அதிகச் செலவிற்கும் தான் அதில் இடமிருக்கின்றது; ஆதலால் அதை உடைத்தெறியவேண்டும் என்று சொல்லும் சுயராஜ்யக் கக்ஷியாருக்குச் சட்டசபையில் எந்தக்காரியம் செய்ய பொருப்பேற்றுக்கொள்ள முடியும்? தவிர, பட்டதாரிகளும், சர்க்கார் நியமன உத்தியோகம் பெற்றவர்களும், சென்ற தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், 1000, 5000 சம்பளம் வரும் பெரிய உத்தியோகங்களையும், பதவிகளையும், பெற்றுக்கொண்டு, அவைகளின் மூலம் சர்க்காருக்கு உதவி செய்துவரும் கக்ஷியாராகிய இவர்கள்,எப்படி வாக்குத்தத்தப்படி நடக்க முடியும்? எப்படி இவர்கள், ஏதாவது ஓர் நிலையில் நிற்க முடியும்? கள்ளை ஒழிக்கச்சர்க்கார் சம்மதம் வேண்டும்; மூன்று வருடக்காலமாவது விடாமல் சட்டசபையிலிருக்கவேண்டும்; சட்டசபையின் மூலம் கள்ளை ஒழிக்கலாமென்ற நம்பிக்கை வேண்டும், ஆகிய இக்கொள்கைகளை ஒப்புக்கொள்ளாதவர்கள் போல் நடிப்பவர்கள் எப்படி சட்டசபைக்குப் போகப்பிரியப்படுகின்றார்களென்பது, வாசகர்களே யோசித்துப் பார்த்தால் இதன் இரகசியம் நன்றாய் விளங்கும்.

இவர்கள் அகராதியில் சுயராஜ்யக்கட்சி என்பதற்கு என்ன வேண்டுமானாலும் சொல்லி, ஜனங்களை ஏமாற்றித்தாங்கள் சட்டசபையில் போய்உட்கார்ந்துகொண்டு பிராமணரல்லாதாரால் செய்திருக்கும் தேவஸ்தான சட்டம்,கல்விச்சட்டம், வகுப்புவாரிப்பிரதிநிதித்வம்,ஆகியசிறிதளவாவது பிராமணரல்லாதாருக்கு அனுகூலமாயிருக்

# வங்காளத்தில் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம்.

இம்மாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வங்காள சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியை சேர்ந்த ஒரு பிராமணரல்லாத அங்கத்தினர் வகுப்புவாரிபிரதிநிதித்துவத்தைப்பற்றி ஒருதீர்மானம் கொண்டுவந்தார். அதாவது—

"இம்மாகாணத்தில் பற்பல வகுப்பினருடைய ஜனத்தொகைக்குத்தக்கபடி இந்த சபைக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுமாறு ஏற்பாடு செய்யவேண்டும்" என்கிற தீர்மானத்தைப் பிரேரேபித்தார். குறைந்த எண்ணிக்கை உள்ளவர்களான ஆங்கிலோ—இந்தியர், ஐரோப்பியர், இந்திய கிருஸ்தவர், முதலியவர்கள் தங்களுக்கு ஒன்றுமில்லாமல் போய்விடுமோ எனப்பயந்து இதை ஆக்ஷேபிக்கத் தொடங்கினார்கள். ஸர், அப்துர்ரஹீம் இவ்வகுப்பார்களுக்கும் சரியான பிரதிநிதித்துவம் கிடைக்கும் படியாக; ஒருதிருத்தம் அசல் தீர்மானத்தோடு சேர்த்தார். அதாவது;—

"குறைந்த வகுப்பினர் முதலியவர்களுக்கும் போதுமான பிரதிநிதித்துவம் ஏற்படுத்தி கொடுக்கவேண்டும்" என்ற திருத்தத்தை பிரேரேபித்தார். இதற்கு விரோதமாயிருந்த சிலர், காஞ்சீபுரத்தில் செய்த தந்திரத்தைபோலவே சட்டம் ஒழுங்கு என்பதன் பேரால் இதை நசுக்கிவிடப்பார்த்தார்கள் ஆனால் அக்கூட்டத்தின் தலைவர் காஞ்சீபுரத்தலைவர் போல்இல்லாமல், நேர்மையும், தன் காலிலேயே நின்று கொள்ளக்கூடிய சக்தியும் வாய்ந்தவராயிருந்தபடியால், இத்தீர்மானங்கள் ஒழுங்குதான் என்று சொல்லி ஓட்டுக்கு விடப்போகும் தருவாயில், அக்கிராசனாதிபதியை வம்புச்சண்டைக்கு இழுப்பது போல் சிலர், அத்துக்கு மீறிப் பேசி தாங்கள் அக்கிராசனாதிபதியால் வெளியிலனுப்பப்பட வேண்டுமென்றே நடந்துகொண்டு வெளியில் போய்விட்டார்கள். பிறகு வெளியே போகப்பட்டவர்கள் ஒன்றுகூடி அக்கிராசனாதிபதியை நீக்கிவிட ஒரு தீர்மானம் கொண்டுவருவதாகச் சொல்லிக்கொண்டு உள்ளே வந்தார்கள். அத்தீர்மானத்தையும் அங்கீகரித்து அக்கிராசனாதிபதி ஓட்டுக்குவிட்டதில் அக்கிராசனாதிபதியை நீக்கிவிடவேண்டும் என்கிற தீர்மானம் தோல்வியுற்றது. ஆனபோதிலும் நிறைவேறின வகுப்புவாரிப்பிரதிநிதித்துவ தீர்மானத்தை எப்படியாவது ஒழிக்க மறுபடியும் சிலர் கூடிக்கொண்டு யோசனை செய்வதாய்த் தெரியவருகிறது.

---

கும் விஷயங்களை ஒழித்து, அதிகாரத்திலும், பதவியிலுமிருக்கும் பிராமணரல்லாதாரையெல்லாம் வெளியில் இழுத்துவிட்டுத்தாங்கள் போய் அந்த ஸ்தானங்களில் உட்கார்ந்து கொண்டு சர்க்காருக்கு ஒற்றர்களாயிருந்து, தங்கள் இனத்தாருக்கெல்லாம் உத்தியோகம் வாங்கிக்கொடுத்து

பிராமணரல்லாதாரை அடியோடு நசுக்குவதுதான் சுயராஜ்யக்கட்சிக்கு அர்த்தம் போலும்.

இதைப்பற்றி பம்பாய் மாகாணத்தில், திலகர் பத்திரிகையென்று சொல்லப்படும், "மராட்டா", என்கிற ஓர் பிராமணப்பத்திரிக்கை எழுதியிருப்பதைப் பார்த்தாலே தமிழ்நாட்டு ராஜீய பிராமணர்களின் யோக்கி"யதை நன்றாய் விளங்கும் அதாவது:-

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியார் வெளியிட்டிருக்கும் தேர்தல் விளம்பரமானது கான்பூர்காங்கிரஸ் தீர்மானத்துக்கு விரோதமாயிருக்கிறது; சட்டசபைகளை விட்டுவிலகுதலும், தடைவேலை செய்வதும்; தங்களுடைய திட்டமென்று சொல்லிக் கொண்டு, அதேசமயத்தில் கள்ளை ஒழிக்கப் பிரயாசைப்படுகின்றோமெனச் சொல்லுவது, ஒன்றுக்கொன்று பொருத்தமாயில்லை. காங்கிரஸ்காரர்கள் அடுத்த தேர்தலில் நாணயமாய் நடந்து கொள்வதானால், முட்டுக்கட்டை போடுவதன் மூலம் சட்டசபையில் வேலை செய்வோமென்றுதான் சொல்லிப்போய்ப் போராடவேண்டுமேயொழிய, குடியை ஒழிக்கப்போகிறோம் என்றுசொல்லிப் போகப்பார்ப்பது பாமர ஜனங்களின் கண்களில் மண்ணைத்தூவுவதான துரோகம் செய்ததாகும்".

இதற்குக் காந்தியடிகளைப் பின்பற்றுவோர் என்று சொல்லிக்கொள்ளும் ஸ்ரீமான் முதலியாரும், காந்தியடிகளின் சிஷ்யர் என்று பொதுஜனங்கள் கருதும்படி நடக்கும், ஸ்ரீமான் ஆச்சாரியாரும் ஏதாவது பதில் சொல்லுவார்களா? அல்லது திட்டுவந்து பெட்டிநிறைகிறதா, துட்டுவந்து பெட்டிநிறைகிறதா என்ற பழமொழிப்படிக்கு யாரோ, எவரோ, நம்மை எப்படியும் சொல்லிக்கொள்ளட்டும்; நமக்கு கொஞ்சம் நஞ்சம் உள்ளதற்பெயரைக் கொண்டு பிராமணாதிக்கத்தை நிலைநிறுத்திகொள்ளலாம் என்று தங்கள் ஏமாற்றுப் பிரசாரத்தை நடத்திக்கொண்டிருப்பார்களோ தெரியவில்லை.

---

# பிராமண உபாத்தியாயர்களின்பேரில் உள்ள சந்தேகங்களுக்கு ஆதாரம்

பிப்ரவரி மாதம் 19ந்தேதி கோயமுத்தூரில் நடந்த ஜில்லாக் கல்விச்சபைக் கூட்டத்தில் சட்டசபை மெம்பரான ஸ்ரீமான் ஆர். வீரய்யன் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அதாவது,"அழுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தபிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் அதிகமாகப் படிப்பதற்காகப் பொதுப் பள்ளிக் கூடங்களுக்கு, தாலூகாபோர்டு, ஜில்லா போர்டு முனிசிபல் கவுன்சில் முதலியவற்றின் தலைவர்கள் பிராமணரல்லாத உபாத்தியாயர்களையே நியமிக்க வேண்டும்; இப்பொழுதுள்ள ஒரு பிராமண உபாத்தியாயர் வேறு பள்ளிக்கூடங்களுக்கு மாற்றிவிடவேண்டும் "என்பதாகப் பிரேரேபித்தார். இதை, ஜனாப், கலந்தர்சாயபு ஆமோதித்தார். இதை, ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார், இத்தீர்மானம் பிராமணர்களைக் குறைகூறுவதாயிருக்கிறது என்ற காரணத்தால், ஒழுங்குத்தவறென்றஆக்ஷேபனை கிளப்பியதில், தலைவர் இவ்வித தீர்மானம் கொண்டுவர, யாருக்கும்அவகாசம் உண்டென்றும் ஒழுங்கானதுதான் என்பதாகவும் சொல்லிவிட்டார். பிறகு இது வெளிப்படையாய் ஒருவகுப்பாரைப் பாதிக்கிறது என்று சிலர் கருதியதால், கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டும்- அந்நகர் முனிசிபல் சேர்மெனுமான; ஸ்ரீமான். சி. எஸ், இரத்தினசபாபதி முதலியார் முழு தீர்மானத்திற்குமாக ஒரு திருத்தம் கொண்டுவந்தார், அதாவது, "லோகல் போர்டு, முனிசிபாலிட்டி, இவைகளின் அக்ராசனாதிபதிகள், தங்கள் அதிகாரத்தின் கீழ் உள்ள பாடசாலைக்கு, அழுத்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகள் தாராளமாய்ச் சேர்த்துக் கொள்ளத் தக்க உபாத்தியாயர்களையே நியமிக்க இக்கல்விச் சபை சிபார்சு செய்கிறது" என்று பிரேரேபித்தார், தீர்மானம் தெளிவாயில்லாததால்; ஸ்ரீமான் வீரய்யன் திருத்தத்தை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டதின் காரணமாய், அசல் பிரேரேபனை தோல்வியுற்றுப் போய்விட்டது. வாசகர்கள், இதிலிருந்தே கீழ்தரபள்ளிக்கூடத்திலிருந்தே தாழ்த்தப்பட்டவகுப்புப்பிள்ளைகளின் படிப்புக்குப் பிராமண உபாத்தியாயர்களால் எவ்வளவு தடை இருக்கிறது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

---

# திங்களூர் அப்பிச்சிமார் மடம்.

ஐயா, அப்பிச்சிமார் திருவருளை முன்னிட்டு, நிகழும் குரோதன-வருஷம் கும்ப மாதம் 17-ந்தேதி (28—2—26) முதல் 22-ந்தேதி (5-3-26) வரை அப்பிச்சிமடத்தில், ஸ்ரீமான் M. A. ஆண்டமுத்துக்கவுண்டரவர்களுக்கு மடாதிபதிப் பட்டமும், குறுப்பநாட்டுப் பட்டமும், சூட்டுவதாயும் ஸ்ரீ அப்பிச்சிமார் முதலான சுவாமிகளுக்கு கும்பாபிஷேகமும் நடத்துவதாயும், பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால்ஷை வைபவங்களுக்குத் தாங்களும், தங்களிஷ்டமித்திர பந்துஜன குடும்ப சமேதாராய் விஜயம் செய்து சிறப்பாய் நடத்திவைத்துக் கொடுக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வி, முத்துக்கவுண்டர்,

எம்.ஏ.பழனிச்சாமிகவுண்டர்,

எம்,ஏ,தேய்வசிகாமணிக்கவுண்டர்

## சென்னை இராயப்பேட்டை ஐக்கிய நாணய சங்க விஷயமாக அறிவிக்கப்பட்ட அபாயகரமான தீர்ப்பு.

ஸ்ரீமான். அ. சிவசங்கர முதலியார் சென்னை இராயபேட்டை ஐக்கிய நாணய சங்கத்தில் 1917 ஸு அங்கம்பெற்று மூவாண்டு சங்க நிருவாகத்தில் இல்லாமல் இருந்து, 1920ஸு ஜூன் மீ 14உ சங்கத்தை விட்டு விட்டு விலகிக்கொண்டார். விலகின போது சங்கத்துக்கு அவர் செலுத்தவேண்டிய கடன் ஒன்றுமில்லை, அவருக்காக ஒருகாசும் சங்கத்தில் கடன் வாங்கவில்லை.

1922ஸு சங்கம் கலைக்கப்பட்டு ரிஜிஸ்திரரால் ஸ்ரீமான். M. K வெங்டாசாரியார் லிக்யூடேடராக நியமிக்கப்பட்டார். லிக்யூடேடருக்கு அதிகாரம் வந்தபோது அவர், நஷ்ட்ட ஈவுத்தொகை ரூபா ஆயிரம் ஏன் கொடுக்கக்கூடாதென்று ஸ்ரீமான் முதலியாருக்கு அறிக்கை ஒன்று அனுப்பினார். அதற்குமுதலியார் ஐக்கிய நாணய சங்க சட்டத்தின் செக்ஷன் 23 பிரகாரம், சங்கத்தின் எந்தக்கடனுக்கும் பொறுப்புடையவரல்ல என்று எழுத்தின் மூலம் விடைதந்தார்.

1925ஸு ஜூன் மீ 17உ, அதாவது இராஜிநாமா செய்த ஐந்து வருடத்திற்குப் பிறகு, லிக்யூடேடர், விதித்த ஈவுத்தொகை ரூபாய் ஆயிரத்தை வட்டியுடன உறுதிசெய்தார். அதைரத்து செய்யும்படியாக உயர்தர நீதிமன்றத்தில் சமீபத்தில் முதலியார் ஒரு விண்ணப்பஞ் செய்தார்.

அவ்விண்ணப்பத்தின் மேல் கனம் நீதிபதி வி. வி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் செய்த முடிவுரையின் சுருக்கம்:–

"லிக்யூடேடர் செய்த ஆர்டரை ரத்து செய்வதற்குரிய அதிகாரம் எனக்கு இல்லாததுடன் இதற்கு முன்னம் அவர் செய்துள்ள நடவடிக்கையைத் தடுப்பதற்கும், எனக்கு அதிகாரம் இல்லை. லிக்யூடேடருடைய ஆர்டர் தப்பாக இருக்கலாம்; ஐக்கிய நாணய சங்கச் சட்டங்களாலும் விதிகளாலும் விண்ணப்பதாரர் எவ்விதமான விடுதலைபெற முடியாமல் விடப்பட்டிருக்கிறார். என்னால் ஏதாவது அவருக்குச் செய்யவேண்டியிருந்தால் என் அனுதாபத்தைத் தான் தெரிவிக்க முடியும். ஆகையால் ஸ்பெஸிபிக் ரிலிப் ஆக்ட் செக்ஷன் 45 பிரகாரம் இவ்விண்ணப்பம்தகுதியுடையதல்ல. ஆகையால் செலவுடன் இதைத்தள்ளிவிடுகிறேன்."

இந்த முடிவு ஐக்கிய நாணய சங்கத்தில் சேர்ந்த எல்லா அங்கத்தவருக்கும் மற்றவருக்கும் ஓர் அபாயகரமான நிலைமையை உண்டாக்கியிருக்கிறது. லிக்யூடேடர் எவரையாவது, ஈவுத்தொகை கொடுக்கும்படியாகக்கேட்கலாம். அவர் முடிவு செய்த பிறகு, அவர் முடிவு தப்பாக இருந்தாலும் அப்பீல் எங்கும் கிடையாது. எப்போது அப்பீல் எங்கும் இல்லையோ, விடுதலையும் எங்கும் இல்லை. இனிக்கலையப்போகும் சங்கங்களும் இந்நிலைமையை அடையும்.

ஸ்ரீமான். முதலியாரைப்போல் அங்கத்தவராக இருந்து சங்கத்தை விட்டு விலகிய ஸ்ரீமான். தீ. செ. பாலசுந்திரம் முதலியாருக்கும் ரூபாய் ஆயிரம் ஈவுத்தொகை விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அவர் வீட்டை ஜப்திசெய்ய அவருக்கு அறிக்கை அனுப்பிஇருக்கிறார்கள்.

சங்கத்தில் கடன் ஒன்றும் வாங்காமல், சதாரண அங்கத்தவராயிருந்த ஸ்ரீமான் சீனிவாச நாயுடு அவர்களுக்கும் ஈவுத்தொகை விதிக்கப்பட்டிருக்கிறது, அதற்காக அவர் வீடு ஏலம் போடப்படுமென்று விளம்பரம் ஒட்டப்படிருக்கிறது.

இவைகளைப்போல பல வீடுகள் ஏலத்தில் வரலாம், கடன்வாங்காத இவர்கள் தப்பிப்பிழைப்பதற்கு சட்டம் இடங்கொடுக்கவில்லை, கடன்வாங்கினவர்களும் சங்கத்தை நிருவாகஞ்செய்த பஞ்சாயத்தவர்களும், ஏழைகளுடைய வரிப்பணத்திலிருந்து சம்பளம வாங்கிச் சங்கத்தை மேல்பார்வை பார்க்கும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களும் சுகமாயிருக்கிறார்கள். சாதாரண அங்கத்தவராயிருந்த குற்றந் தவிர மற்றெதுவுஞ் செய்யாத நண்பர்கள் துக்கத்தை அனுபவிக்கிறார்கள்.

1920ஸு மார்ச் மீ 1உ சங்கத்துப் பஞ்சாயத்தார் சென்னை சென்டிரல் அர்பன் பாங்கியில் ரூபாய் 5000 கடன் வாங்கினபோது அங்கத்தவர்கள் 150 பேர் இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய சொத்து ரூபாய் 91606—6—1 என்று கண்டிருக்கிறது. இச்சங்கத்துத் தலைவராயிருந்த ஸ்ரீமான். M. S. சாபத் அவர்கள் சொத்து அப்போது கடனின்றி ரூபாய் முப்பதாயிரம் என்று கண்டு இருக்கிறது. இச்சொத்துக்களெல்லாம் எங்கே போயின? இச்சங்கம் 1915 ம் வருடத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. என்ன மோசம்! பொது மக்காள் கவனியுங்கள்! ஐக்கிய நாணய சங்கங்களையும் காப்பாற்றுவதற்காக ஏழைகளுடைய வரிப்பணத்திலிருந்து இம்மாகாணத்தில் வருஷம் ஒன்றுக்கு சுமார் ஆறு லக்ஷ ரூபாய் கவர்ன்மெண்டாரால் உத்தியோகஸ்தர்களுக்குச் செலவு செய்யப்படுகிறது. பொது மக்களே கண் விழியுங்கள். பொது மக்களுக்குத்தீமை இல்லாதபடி சட்டத்தைத்திருத்தக் கிளர்ச்சி செய்யுங்கள். இல்லையேல் நாளைக்கு உங்களுக்கும், இந்த நிலைமை ஏற்படும்.

உங்கள் கிளர்ச்சிக்கு இறைவன் துணை செய்வாராக.

ஒரு நிருபர்

## மதிப்புரை

### கந்தர் சஷ்டிக் கவசம்.

கந்தர் சஷ்டிக்கவசம் என்னும் நூல், செந்தமிழ்ச் செல்வம் பத்திராதிபரான திருச்சி, திருவாளர் அமிர்தம் சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றிய மெய்ப்பொருள் விளக்க உரையுடன் 100 பக்கத்துக்கு மேற்கொண்ட புத்தகமொன்று நமது பார்வைக்கு வந்துள்ளது. அது ஒவ்வொரு அகவற்கும் பதம் பதமாய் உரையும், விருத்தியுரையும், அவற்றிற் சேற்ற மேற்கோள்களுடனும், சுப்பிரமணிய சவாமி படத்துடனும் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வருமையான புத்தகத்தின் விலை அணா எட்டுத்தான்.

### கந்தரநுபூதி

(மூலமும் உரையும்)

இது ஸ்ரீ சாது. கோ. வடிவேலுச் செட்டியாரவர்களால் இயற்றிய உரையுடன், ஸ்ரீ சாதுரத்ன சற்குரு புத்தகசாலையாரால் அருணகிரிநாத சுவாமிகளின் சரித்திரத்தோடு, வேதாந்த தத்துவ முறையில் பதவுரையோடும், விசேட உரையோடும் பல மேற் கோள்களுடனும் நிவேதனப்பொருள்களின் விபரமும், ஜெபிக்கும் உருஎண்களும் சேர்த்து 200பக்கங்களுக்குமேலாக சுப்பிரமணிய சுவாமிப்படத்துடனும், ஸ்ரீ வடிவேலுச்செட்டியார் படத்துடனும் அச்சிட்டு வெளியாகியிருக்கிறது. இதன் விலை எட்டணா. இவ்விரு புத்தகங்களும் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ சாது இரத்ந சற்குரு புத்தகசாலை, 4/34 நயினியப்ப நாயக்கன் தெரு, பார்க்டவுன் பீ. ஓ. சென்னை.

## பிராமணர்களின்சங்கங்கள்

பிறவியில் உயர்வு தாழ்வு உண்டு என்பதையும், அவற்றில் பிராமணர்களாகிய தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்பதையும், நிலை நிறுத்த இதுசமயம் நமது நாட்டில் ஆங்காங்கு பிராமண சங்கங்கள் ரகசியமாயும், வெளிப்படையாயும், ஏற்படுத்தப்பட்டுவருகிறது. நமது தேசிய பிராமணர்கள், நம்மிடம் வரும்போது எல்லோரும் சமம் என்று சொல்லிக்கொண்டும், தீண்டாமை உயர்வு தாழ்வு இவைகளை ஒழிக்கப்போகிறோம் என்று, சொல்லிக்கொண்டும் ஓட்டு பெறுவதும், பிராமண சங்கங்களுக்குப் போய் தீண்டாமையையும் உயர்வுதாழ்வையும் நிலைநிறுத்த அவர்களுக்கு வழிசொல்லிகொடுப்பதும் அதற்கனுகூலமாய் நம்முடைய ஓட்டுபலன்களை உபயோகப்படுத்துவதுமாகஇருகிறார்கள். இவற்றை நம்மில் பலர் அறிந்தும், தங்கள் சுயநலத்தை முன்னிட்டு அறியாதவர்போல் நடித்து அவர்களுக்கு ஓட்டுவாங்கிகொடுத்தும், பிராமணசங்கங்களை ஆதரித்தும், திரிகிறார்கள். இதை அறியஓட்டர்களுக்கு இன்னமும் யோக்கியதைவரவில்லையென்றால் இந்த ஓட்டர்களின் பிரதிநிதிகள் எப்படி நமது நாட்டுக்கு பிரதிநிதிகளாவார்கள்?

# பிராமணப்பத்திரிகைகளின் பிரசாரம்

## உஷார்! உஷார்!! உஷார்!!!

(சித்திரபுத்திரன் எழுதியது)

பொது ஜனங்கள் தேசத்தின் உண்மை நிலையை உணருவதற்கு ஆதாரமாயிருப்பது வர்த்தமானப் பத்திரிக்கைகள் என்று சொல்லுவார்கள். ஆனால் அவை நமது நாட்டின் உண்மை நிலையை மறைத்துப் பொய்யைச் சொல்லிப் பாமர ஜனங்களை ஏமாற்றி, ஒருவரைக்கெடுத்து ஒருவர் பிழைப்பதற்குத் தான் அவை முழுதும் ஆதாரமாயிருந்துவருகிறது. நமதுநாட்டைப்பொறுத்தவரையில், பெரும்பான்மையான மக்கள் தங்கள் முன்னோர்கள் எவ்வளவு பெருமை உடையவர்களாயும், இத்தேசத்தையே ஆண்டவர்களாயும், பராக்கிரமசாலிகளாகவும் இருந்து வந்திருந்த போதிலும், இன்றையத்தினம் "பிற்பட்டவர்"களாகவும், "சூத்திரர்"களாகவும் இருப்பது ஏன்? இதற்கு பொறுப்பாளி யார் என்று பார்த்தால், அது நமது நாட்டுப் பத்திரிக்கைகளேயாகும்.

தற்காலம் நமது நாட்டில் செல்வாக்குப்பெற்றும் பெரும்பாலோர் கையிலும் ஊசலாடுவது, பிராமணப் பத்திரிக்கைகளே அல்லவா? அப்பத்திரிக்கைகளுக்கு அவ்வவ்விடங்களின் சமாச்சாரங்களை எழுதியனுப்பும் நிருபர்களும் பிராமணர்களே அல்லவா? அப்பத்திரிக்கைகளுக்கு ஏஜண்டுகளாயிருந்து விற்றுக்கொடுப்பவர்களும் பெரும்பாலும் பிராமணர்களே அல்லவா? அப்படி இருந்தும், அதற்குப்பணம் கொடுத்து வாங்கிப் படித்து கெட்டுப்போகிறவர்கள் மாத்திரம் பிராமணரல்லாதார்களாகவே இருக்கிறார்கள். பிராமணப்பத்திரிக்கைகள் இதுசமயம் நமதுநாட்டில் ஒவ்வொரு பட்டணங்களிலும், கிராமங்களிலும் பிரவேசித்திருக்கின்றது. அங்குள்ள படிக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் அப்பத்திரிக்கைகளைப் படிப்பதும், அவற்றை உண்மை என்று நம்புவதும், மற்றவர்களுக்கு அவற்றை எடுத்துச் சொல்லுவதுமான வழிகளில் பிராமணப்பத்திரிக்கைகளின் அபிப்பிராயத்தை தேசமெல்லாம் பரப்பச்செய்து விடுகின்றன. சாதாரணமாய் நமது கிராமங்களிலுள்ள பாமரஜனங்களும் "சுதேசமித்திரன்" என்னும் பிராமணப் பத்திரிக்கையின் அபிப்ராயத்தைத் தான் உண்மையான ராஜீய அபிப்ராயமென்றும், அது யார் யாரைத்தலைவர் என்று சொல்லுகிறதோ, அவர்களைத் தலைவர்கள் என்றும், அது யார் யாரைத் தேசத்துரோகியென்று சொல்லுகிறதோ அவர்களைத் தேசத் துரோகி என்றும், அது சொல்லுகிறபடியெல்லாம் நடப்பதும், நினைப்பதும் தான் தேச கைங்கரியமென்றும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுபோலவே, மற்றும் "சுயராஜ்யா" என்னும் ஒரு தமிழ் தினசரிப்பத்திரிக்கையும், பிராமணர்களால் நடத்தப்பட்டாலும், பிராமணரல்லாதாரை ஏமாற்றுவதற்காக வேண்டி அதன்உண்மைப்பத்திராதிபர்கள் பெயரை மறைத்து, பிராமணரல்லாதார் பெயரைப்போட்டு ஏமாற்றிவருகிறார்கள். உண்மையில் அதன் ஆசிரியர்கள் ஒரு அய்யங்கார் பிராமணரும், ஒரு விபூதி பிராமணருமாயிருக்க அது வெளியில் தெரிந்தால் அப்பத்திரிக்கையைப் பிராமணப்பத்திரிகையென்று, பாமர ஜனங்கள் நினைத்துவிடுவார்கள் என்று வேண்டுமென்றே மறைத்துவிட்டு, ஒத்துழையாமையில் ஈடுபட்டுத் தங்கள் உத்தியோகங்களை விட்டு கஷ்டப்பட்டதால் செல்வாக்கு ஏற்பட்டிருக்கும், ஸ்ரீமான்கள் கிருபாநிதி, திரிகூடசுந்தரம் பிள்ளை ஆகிய இருவர் பெயர்களைக் காட்டித் தங்கள் நன்மைக்கான அபிப்பிராயங்களை ஷியார்கள் அபிப்பிராயமென்று நினைக்கும்படி ஜனங்களுக்குள் புகுத்திவருகிறார்கள். இந்த பிராமணரல்லாத கனவான்களும, கொஞ்சமும் கவலையில்லாமல் இவ்வித செய்கைக்குத் தங்கள் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்.

பெரும்பாலும் இப்பத்திரிகைகளுக்கு மூலதனம் ஏறக்குறைய முக்கால்பாகம் பிராமணரல்லாதார்களுடையதே. அதை வாங்கி வாசித்து அவர்களுக்கு லாபம் கொடுக்கிறவர்களும் பிராமணரல்லாதார்களே. இவ்வளவு இருந்தாலும், இப்பத்திரிக்கைகளைக்கண்டால் பிராமணரல்லாத தலைவர்கள் என்போர்களிலும், பத்திராதிபர்கள் என்போர்களிலும் பெரும்பாலோர் பூனையைக்கண்ட கிளிபோல் நடுங்குகிறார்கள். தங்கள் ஜாதகத்தையே அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, அந்தப்பிராமணப்பத்திரிககைகளையே தங்களுக்கு பலன் எழுதும்படி பல்லைக் கெஞ்சிக்கொண்டுதிரிகிறார்கள். மகாத்மா போன்றவர்களே இப்பிராமணப் பத்திரிக்கைகளைக்கண்டால் சில சமயங்களில் பயப்பட்டு சமயோசிதமாய் நடக்க வேண்டியிருக்கிறதென்றால், ஐயோ பாவம் மற்ற ஆகாசக் கோட்டைக்காரர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அப்புறம் குட்டித்தலைவர்கள், தொண்டர்கள் என்போர்களைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

இம்மாதிரி ஒரு பெரியசமூகத்தையே-அதன் தலைவர்கள் என்போரையே இப்பத்திரிக்கைகள் அடக்கி ஆண்டுகொண்டு, தங்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக்கொண்டு வருவதை எத்தனை நாள்களுக்குத்தான் சகித்துக்கொண்டு வருவதென நினைத்து சரியான மனிதர்கள் என்போர் யாராவது துணிந்து இதன் தந்திரத்தை வெளிப்படுத்த கொஞ்சம் பிரயத்தனப்பட்டால், அவர்களை அடியோடு ஒழிக்க பிராமணப்பத்திரிக்கைகளும், பிராமணத்தலைவர்களும், பிராமண அதிகாரிகளும் எல்லாரும் ஒன்று சேர்ந்து விடுகிறார்கள். அந்த சமயங்களில் அய்யர்—அய்யங்கார்—ஆச்சார்,—ராவ்-என்கிற பேதமே இல்லாமலும், தேவாஸி-சுயராஜ்யக் கட்சி—ஒத்துழையாக்கட்சி—காந்தி சிஷ்யக்கட்சி—சர்க்கார் உத்தியோகஸ்தர் என்கிற வித்தியாசமே இல்லாமலும், ஒரே கட்டுப்பாடு—கம்பியில்லாத தந்திபோல் ஒரே அபிப்பிராயம்; ஆளுக்கொருவேலை; அதாவது, பத்திரிக்கையில் வைவது ஒருவர்; பிரசங்கம் மூலம் வைவது ஒருவர்; பணம்கொடுத்து வையச்சொல்லுவது ஒருவர்; காந்தியிடம் சாடி சொல்லுவது ஒருவர்; சர்க்காருக்குக் காட்டிக்கொடுப்பது ஒருவர்; அதிகாரத்தைக்கொண்டு நசுக்குபவர் ஒருவர்; ஆக ஒவ்வொருவரும் தங்களாலானதை உடனே செய்யப் புறப்படுவதன் மூலம் எப்பேர்ப்பட்டவரையும் நடுங்கச்செய்து விடுகிறார்கள். உதாரணமாக ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்திர முதலியார் நிலைமையைப் பார்த்தாலே இதன் உண்மை பொதுஜனங்களுக்கு நன்றாய் விளங்கும். சென்ற வருஷமெல்லாம், சுயராஜ்யகட்சியை வைதுகொண்டிருந்தவரும், கொஞ்சகாலத்து முன்பெல்லாம் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொண்டிருந்தவரும், செல்வச்செருக்கும், செல்வாக்குப் பெருக்கும் நிலைக்காது என்று ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காருக்கு சாபம் கொடுத்தவரும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்பெற காங்கிரசுதான் தகுந்த இடம் என்று காஞ்சி அக்ராசனப்பிரசாரத்தில் சொன்னவரும், ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானபோது, ஸ்ரீமான்கள் வ. வெ. சு. அய்யர், சீனிவாசய்யங்கார் சிஷ்யர்கள் முதலியவர்கள் ஸ்ரீமான் நாயக்கர்மீது, நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவந்த காலத்தில்" ஒரு பிராமணரல்லாதாரான ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அக்ராசனம் வகிப்பதைப் பொறுக்கமாட்டாமல், பிராமணர்கள் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள்; சட்டசபையில் செய்வது போலவே இங்கும் செய்கிறீர்களா" வென்று கேட்டவருமான நமது முதலியார் இப்போது, தன்னை மாரீசனென்று சொன்னவரும், காந்தியடிகளுக்குப்புத்தியில்லையென்று சொன்னவரும், ஒத்துழையாமை சட்டவிரோதமென்று சொன்னவருமான, ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பின்னால் திரிந்துகொண்டும், அந்த ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரையே தமிழ்நாட்டுக்குத் தலைவராக்கப்பாடுபட்டுக் கொண்டும், சுயராஜ்யக்கட்சி யோக்கியமான கட்சியென்றும், அதினிடமும் அதன் தலைவரிடமும் ஒத்துழையாமை வாசனை அடிக்கின்றதென்றும், சட்டமறுப்பு அங்கேயே பதுங்கியிருக்கின்றதென்றும். வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கூடாது என்றும், முன் தான் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கேட்டது கூட, ஜஸ்டிஸ்கட்சியை ஒழிப்பதற்கென்றும், காங்கிரசில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கக்கூடாது என்றும், சுயராஜ்யக்கட்சிக்கே ஓட்டுக்கொடுங்களென்றும், சொல்லுவதானால், அதன் சக்தி எவ்வாறென்பது ஒருவர் சொல்லாமலே விளங்கும் இவ்வளவுபயமும், மாறுதலும் இப்பேர்ப்பட்டவர்களுக்கெல்லாம் ஏற்படக்காரணமென்ன? பாமரஜனங்கள் பிராமணப்பத்திரிக்கைகளை வாங்கிப்படிப்பதும், பிராமணத்தலைவர்களைக் கொண்டாடுவதும், அவர்கள் சூழ்ச்சிகளை அறியாமலிருப்பதும் அவர்கள் கையிலிருந்தும் அதிகாரங்களுக்குப் பயப்படுவதுமே அல்லாமல் வேறு என்ன? ஆதலால் ஆங்காங்குள்ள பிராமணரல்லாத பிரமுகர்கள் தங்கள்சமூகத்திற்கு நன்மை செய்யவேண்டுமென்றிருந்தால், தங்கள் சமூகம் இம்மாதிரி ஏமா

யவர்கள் ஆகாமல் இருக்கவேண்டுமென்று விரும்பினால், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு குடிசையிலும் "திராவிடன்" "குடி அரசு" முதலியவைகள் போன்ற உண்மை உரைக்கும் பத்திரிக்கைகளைச் செலுத்தவேண்டும். உண்மை உரைப்பதன் மூலம் அதன் ஆசிரியர்கள் பிராமண அதிகாரத்தால் ஜெயிலுக்குப்போக வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் தயாராய்த்தான் இருப்பார்கள். ஆதலால் வஞ்சகப் பத்திரிகைகளைப்பார்த்து மோசம் போகாமலிருக்கச் செய்யவேண்டும்.

இந்தக்காரியங்களை நீங்கள் செய்யாமலிருந்தால், வரப்போகும் சட்டசபை எலெக்ஷனில் பிராமணரல்லாதார் கண்டிப்பாய் தோற்கடிக்கப் பட்டுப் போவார்கள். ஸ்ரீமான்கள் டி. எம். நாயரும், ஸர். பி. டி. செட்டியாரும் எவ்வளவோ அரும்பாடுபட்டு பிடித்துக்கொடுத்த கோட்டையை மறுபடியும் பிராமணர்கள் சுவாதீனப்படுத்திக்கொண்டு உங்களை வெளியாக்கிவிடப் போகிறார்கள். அப்புறம் 10வருடமோ, 100 வருடமோ கடவுளுக்குத்தான் தெரியும். வீணாய்ச் சர்க்காரை நம்பிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. சர்க்கார் எந்தக்கை வலுக்குமோ, அந்தக்கையில் சேர்ந்து விடுவார்கள். இப்பொழுதே சர்க்காருக்குப் பிராமணர்களிடத்தில் பயம்வந்துவிட்டது. அவர்கள்தான் அடுத்த சட்டசபையில் ஜெயிக்கப்போகிறார்கள் என்று எண்ணிக்கொண்டு அவர்களை இப்பொழுதிருந்தே தடவிக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். பிராமணரல்லாதாரே எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!

## இந்தியா சட்ட சபை.

### தென்னிந்தியாவில் புதிய ரயில் பாதைகள்.

தென் இந்தியாவில் ரயில்பாதைகளைப் பற்றி ஸ்ரீமான். ஷண்முகம் செட்டியார் சனிக்கிழமையன்று பல கேள்விகள் கேட்டார். மிஸ்டர் ஸிம் பின்வருமாறு பதில் கூறினார்.

போத்தனூரில் உள்ள தென்இந்தியா ரயில்வேத்தொழிற்சாலை பூராவாகத் திருச்சிக்கு மாற்றப்படப்போவது வாஸ்தவம். (1) கோயமுத்தூர் ஜில்லாவில் திண்டுக்கல் பொள்ளாச்சி பாதை மீட்டர்கேஜாகப் போடப்பட்டு வருகிறது. 1927ல் அது முடிவு பெறும். (2) பிராட்கேஜ் மெயின் லயனைக் கோயமுத்தூர் வழியாகத் திருப்பிவிடவும்; போத்தனூரிலிருந்து கோயமுத்தூருக்கு மீட்டர்கேஜ் பாதையை விஸ்தரிக்கவும், கோயமுத்தூர் மேட்டுப்பாளையம் பாதையை மீட்டர்கேஜாகச் செய்யவும் பரிசீலனை நடந்துவருகிறது. (3) திண்டுக்கல் பொள்ளாச்சி பாதையைப் பாலக்காட்டிற்குக் கொண்டுபோக ஸர்வே நடந்து வருகிறது. (4) மீட்டர்கேஜில் பின்கண்ட பாதைகளைப்போட யோசனை நடந்துவருகிறது. (அ) ஈரோடு-சத்தியமங்கலம் பாதை (ஆ) நஞ்சங்கோடு; சத்தியமங்கலம், திருப்பூர், பழனிப்பாதை (இ) மேட்டுப்பாளையம் சத்தியமங்கலம் பாதை. (ஈ) சேலம்ஆத்தூர். விருத்தாசலம் பாதையின் விரிவான திட்டம் இப்பொழுது தயாரிக்கப்பட்டுவருகிறது. அந்தத்திட்டம் கிடைத்தவுடன் அந்தப்பாதை பொருளாதார வழியில் வலுவானதென்று தோன்றினால் அதற்கு அனுமதி கொடுப்பதில் தாமத மேற்படாது, மதுரையிலிருந்து தேனி வழியாக போடிநாய்க்கனூருக்கு ரயில்பாதைபோட நிச்சயிக்கப்பட்டிருக்கிறது, கொடைகானல்ரோடு தேனிப் பாதைக்குப்பதிலாக இது போடப்படும்.

## சுயராஜ்யக்கக்ஷிக்கு தமிழ் நாட்டிலுள்ள மதிப்பு!

வேலூருக்கு, ஸ்ரீமான்கள். ஸ்ரீனிவாசய்யங்கார், திரு வி. கலியாணசுந்திர முதலியார், ஜனாப். ஷாபி. முகமது ஆகியவர்கள் போயிருந்ததாகவும், 100, 150 பேர்களே கூட்டத்திற்கு வந்திருந்ததாகவும், சுயராஜ்யக் கட்சியின் பெருமையைப்பற்றி ஸ்ரீமான். கலியாணசுந்திர முதலியார் பேசிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், சுயராஜ்யக்கட்சியார், வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வருவோர்களுக்கு எதற்காக ஆள்வரி போட்டார்களென்றும், சுயராஜ்யக்கட்சியின் சென்னைத்தலைவரான ஸ்ரீமான். சாமி. வெங்கிடாசலம் செட்டியார், கவர்னருக்கு எதற்காக டீபார்ட்டி கொடுத்தாரென்றும், சிலர் எழுதிக்கேட்க, ஜனாப், ஷாபிமுகமது கூட்டமுடிவில் பதில் சொல்லுவதாகச் சொல்லிவிட்டு, ஸ்ரீமான், சீனிவாசய்யங்காரும் சிலவார்த்தைகள் பேசினதாகவும், கடைசியாகக் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலே கூட்டத்தைக் கலைத்துவிட்டதாகவும் பத்திரிக்கைகளில் காணப்படுகிறது.

## ஆம்பூரில்

ஸ்ரீமான். டி. ஆதிநாராயணச்செட்டியார் ஆம்பூரில்; ஓர்கூட்டத்தில் பேசினதாகவும், அதில் ஜஸ்டிஸ்கட்சி மெம்பர்களை மனதில் வைத்துக்கொண்டு, தாலூகா, ஜில்லாபோர்டு மெம்பர்கள், ஏழைகளுடைய பணத்தைப் பிரயாணப்படிச் செலவுக்காக அதிகமாக வாங்குகின்றார்களென்றும் சொல்லுகையில், அதுசமயம் கூட்டத்திலுள்ள சிலர் ஸ்ரீமான். செட்டியாரைப்பார்த்து தாங்கள் சென்னை சட்டசபைக்குச் செல்லும்போது, தாங்கள் பிரயாணப்படி வாங்காமல் விட்டுவிடுகின்றீர்களா? அது ஏழைகளுடையபணமல்லவா? என்று கேட்டார்கள். அதற்கு ஸ்ரீமான். செட்டியார், சட்டசபைக்குச் செல்லும்போது தம்முடன் பல நண்பர்கள் வருவதாகவும், அவர்களுக்குக் காப்பி முதலிய செலவுக்காக படி வாங்கவேண்டியிருக்கின்றதென்றும் கூறினார். கூட்டத்தில் இருந்தவர்கள் கொல்லென்று சிரித்தார்கள். மறுபடியும் ஸ்ரீமான். செட்டியாரைப்பார்த்துத் தாங்கள் கூட்டுறவு இயக்கத்தில் வட்டியை உயர்த்தும் தீர்மானத்தை ஆதரித்ததுண்டாவென்றும், சர்க்கார் உத்தியோகத்தை ஏற்கக்கூடாதென்று தாங்கள் சொல்லுவது எங்களுக்கு மாத்திரந்தானா, தங்களுக்கும்—தங்கள் மகனுக்கும் அது சம்பந்தமில்லையாவென்றும் சிலர் கேட்டதாகவும், கூட்டத்தில் தலைமை வகித்திருந்த ஒரு ஐயர், எழுந்து பிரசங்கம் முடிந்துவிட்டதாகவும், கூட்டத்தை கலைத்துவிட்டதாகவும் சொல்லிப்போய் விட்டார்கள். இவர்கள் புறப்பட்டுப்போயும், கூட்டம் கலையாதிருந்தபடியால், ஸ்ரீமான்கள், வேலூர். பத்மநாப முதலியார், திருப்பத்தூர் கரியக்வுண்டர் இவர்களும், வேலூர் ஸ்ரீமான். ராவ்பகதூர் முருகேச முதலியார் தலைமையின் கீழ், தற்போதைய காங்கிரஸ்கட்சியின் நிலைமை இன்னது என்பதைப்பற்றியும், பேசினார்கள். கூட்டம் அமரிக்கையாகவே யிருந்தது. கடைசியில், ஸ்ரீமான். முருகேசமுதலியார் தற்காலத்துப் பத்திரிக்கைகளைப் பற்றிப்பேசிவிட்டு, "குடி அரசு" பத்திரிக்கைதான் உண்மையை உள்ளபடி தெரிவிக்கின்றதென்றும், ஆகையால் உண்மையறிய வேண்டியவர்கள் அதனை ஆதரிக்கவேண்டுமென்றும், சொல்லி அக்ராசனர் முடிவுரையுடன் பலத்த கரகோஷங்களினிடையே கூட்டம் முடிவடைந்தது. பிராமணப் பத்திரிகைகள் இவ்வுண்மைகளை அறிய முடியாமல் திரித்து எழுதியிருப்பதாகவும் தெரியவருகிறது.

## சுகோதயம்பத்திரிக்கையின் அவதூறு வழக்கு

சுகோதயம் பத்திராதிபரான ஸ்ரீமான். ரெங்கசாமி ஐயங்கார், வாதி ஸ்ரீமான். சேஷாசல செட்டியாரைப்பற்றித் தன் பத்திரிக்கையில் தான் வெளியிட்டிருந்த விஷயங்கள், ஸ்ரீமான். செட்டியாருக்கு மான நஷ்டம் அல்லது அவதூறு உண்டாகச் செய்யவில்லையென்று ஒப்புக்கொண்டும், அப்படி வெளியானதைப்பற்றித்தான் வருந்துகிறேனென்றும், தனது பத்திரிக்கையிலும், இதைப் பிரசுரிக்கிறேனென்றும், ஒப்புக்கொண்டதின் பேரில், விவகாரம் முடிவடைந்து விட்டது. விவகாரம் முடிவு பெற்றது பற்றி நாம் சந்தோஷமடைகிறோம். ஆனாலும் வழக்கின் முடிவு ஸ்ரீமான். செட்டியாருக்கு ஜெயமோ அல்லது அபஜயமோ என்பதைப்பற்றி நமக்கு கவலையில்லை. ஆனாலும் பத்திரிக்கைகளின் சுதந்தரத்திற்குத் தோல்வியென்று தான் நாம் கருதவேண்டியிருக்கிறது.

## அகம்படிய குலத்தினர்கட்கோர் விண்ணப்பம்.

நாளது 28-2-26 ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணிக்கு, தஞ்சை ஜில்லா திருத்துறைப்பூண்டி போர்டு ஸ்கூலில் இக்குல கூட்டம் நடைபெறும். அதுகாலை ஒவ்வொரு ஜில்லாக்களிலும் சங்கங்கள் நிறுவுவதைப் பற்றியும், குலமுன்னேற்றத்தைக்குறித்து முடிவு செய்யவும் விரைவில் ஓர் மகாநாடு கூட்ட ஏற்பாடுசெய்யப்படும்.

தஞ்சை தாலூக்காபோர்டு தலைவர் ஸ்ரீமான் த. வே. உமாமகேஸ்வரம்பிள்ளை, பட்டுக்கோட்டை தாலூகா போர்டு தலைவர் ஸ்ரீமான் நாடிமுத்து பிள்ளை, திருவாரூர் ஸ்ரீமான் இராஜகோபால பிள்ளை B. A. B. L. முதலியகனவான்கள் இது விஷயத்தில் அரியமுயற்சி செய்து வருகின்றார்கள். மற்றும் வெளி ஜில்லாக்களிலிருந்தும், பல கனவான்கள் விஜயம் செய்வார்கள். ஆகவே குலாபிமானிகள் யாவரும் தவறாது வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அ. திருஞானசம்பந்தம்
அந்தணர்பேட்டை.

## குருகுலம் யாது?

பண்டிதர், அ. கிருஷ்ணசாமி நாயுடு எழுதுவதாவது.

பரந்த பாரத நாட்டில் குருகுலங்களை யாங்கு காண்பது? குருகுலம் எனினும், ஆசிரியரின் மரபு எனினும் ஒக்கும். ஒவ்வொருவரின் வழித்தோன்றின பின்னோர்க்கே "குலம், மரபு" என வழங்கப்பெறுகின்றன. குலத்தினர், மரபினர் என்னும் வழக்காறுகள் நம் நாட்டில் ஆழ்ந்து வேரூன்றியுள்ளமை கண்கூடு. ஒவ்வொருவரும் இன்னகுலத்தினர், இன்னமரபினர் என்று கூறுவதில் பெருமை கொள்கின்றனர். ஒவ்வொருவரும் தத்தம் குலம் ஓர் உயர்ந்த மரபினின்று வந்ததென்னும் கதையினைக் கட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். இக்காலத்திலும்—காந்தியடிகள் காலத்திலும்— ஆங்கிலேய ஆளுகைக்காலத்திலும்—குலங்களைப்பற்றி மரபுகளைப் பற்றிக் கட்டிப்புனைந்துரைக்கும் காலத்திற்குக் காலன் வரவில்லை, குலத்தின் முன்னேற்றத்திற்கு ஓர் மரபினைக்கற்பிக்கும் காலப்பேயே தலைவிரித்தாடுகின்றது. இந்நிலையில் குருகுலத்தை என்னென்று கூறுவோம்.

இம்முறையில் நோக்குவோமேயாயின், குருகுலம் என்பது கௌரவரையே குறிக்கும். குருகுலத்தோர் துரியோதனாதியர் என்பதை யறியாதார் யாவர்? குரு அல்லது ஆசிரியரின் மரபு குருகுலம் என்பதை யறிந்தோர் யாவர்; முன்னவர் பலர்; பின்னவர் சிலர். ஆயினும், குருகுலம் என்பதில் ஓர் ஐயம் உண்டு. ஓர் குருவின் வழித்தோன்றியோர் மக்கள் அன்றோ குருகுலத்தவர் எனக்கூறப்பெறுவர். அங்ஙனம் குருவின் வழித்தோன்றியோர் யாவர்? குருக்களெனத் திரியும் சிறு கூட்டத்தாரையும் அவர் வழித்தோன்றுவோரையும் குருக்கள், குருகுலத்தோர் எனக்கூறுவதுண்டு. இக்கூட்டத்தாரை உலகம் எள்ளுகின்றது; தள்ளுகின்றது. எள்ளினும் என்! தள்ளினும் என்! இக்கூட்டம் பொருள்பறிப்பதொன்றினையே குறிக்கொண்டு குருக்கள், குருக்கள் எனப்பெயர்புனைந்து ஊர் ஊராகச் சுற்றித் திரிகின்றன. இப்பொழும் குருக்கள் கூட்டத்தை—வெறும் சோற்றுக்கூட்டத்தை—பற்றியும் அக்கூட்டத்தைப் பின்பற்றும் குறும்பாடுகளைப் பற்றியும் ஒன்றுமே கூறுதற்கு இது தருணம் அன்று. இக்கூட்டத்தோர் குருகுலம் என்னும் மொழிக்கு எவ்வகையினும் ஏற்றவரன்று.

ஆகையால் குருகுலம் என்பது யாது? பழங்காலத்துப் பாரதநாடுமுற்றும் பரவியிருந்த பள்ளிக்கூடங்களையே குருகுலம் என்று பகரல்வேண்டும். அக்காலம் கல்வி என்னும் பூங்கொடி குருகுலம் என்னும் கொழுகொம்பர் வழியாகவே செழித்துப் பூத்து வளர்ந்துவந்தது. அதுகாலை ஆசிரியரும் மாணவரும் ஒன்றிய அன்புடையராய் ஓரிடத்திலேயே உறைந்து வந்தனர். ஆசிரியன் அப்பனாகவும், மாணவர் மக்களாகவும் மனமொத்துப் பயின்றுவந்தனர். இங்ஙனம் பயிற்சிபெற்ற இடமே குருகுலமாகும். இக்குருகுலத்தின் வழிவந்தமக்களும் குருகுலத்தவராவர். எங்ஙனம்? மக்கள் இருவகைப்படுவர், எவ்வாறு? ஊனசம்பந்தமாவது உடம்பினைப்பற்றித் தோன்றியஉறவின் முறையினர் ஞானசம்பந்தமாவது அறிவைப்பற்றித் தோன்றியமாணவ பரம்பரையினராகிய இஞ்ஞான சம்பந்தம் பெற்ற மக்களே குருகுலத்தில் வதிந்தனர் அவ்வழித்தோன்றியவரே குருகுலத்தவரென்றும் பெயரும் பெற்றனர். இவ்வாறான பரம்பரையை குருபரம்பரைஎன வைணவ நூல்களும் விளம்புரம்; சைவநூல்களும் செப்பும்.

இவ்வாறான குருகுலங்களை எங்கேனும் காண்கின்றோமா? அருமை; அருமை. வடக்கே, சபர்மதி ஆச்சிரமத்தில் சாந்திமுனிவரால் தோற்றுவிக்கப் பெற்றசத்தியாகிரகக் குருகுலம் ஒன்றுண்டு; அரித்துவாரத்தில் ஆரியசமாஜ ஆசிரியரால் ஆக்கப்பெற்ற குருகுலம் ஒன்றுண்டு; சாந்திநிகேதனம் எனக்கவியாசரால் காணப்பெற்ற குருகுலம் ஒன்றுண்டு. இவற்றையன்றிக் கூறும் நிலையில் ஒன்றையும் காணேம். தமிழ்நாட்டிலோ சில தோன்றின; மறைந்தன, மாண்டன. அதனுள் சேரமாதேவியும் சேர்ந்தது, எனினும் ஒரு குருகுலம் இன்னும் இருந்து வருகின்றது. அஃது நீலகிரியில் அரும்பியுள்ள ஸ்ரீநாராயண குருகுலம். வானத்தின் நீலமுகடு முட்டிய நீலகிரியில் நிலைத்துள்ள ஸ்ரீ. நாராயணகுருகுலம் ஸ்ரீமான் பி. நடராஜன் எம். ஏ. எல். டி. அவர்களால் காணப்பெற்றது. இக்காளில் எம். ஏ. எல். டி. யென்னும் மாபெரும் சுவர்க்கலோகப்பட்டம் பெற்றவர்கள், அப்பட்டத்திற்காம் பதவியையன்றோ வதிப்பதற்குப் பெருவிருப்பங் கொண்டுள்ளார்கள்; அவையனைத்தும் துறந்து தன்னுடன் இன்னும் சில உயர்தரப் பட்டம்பெற்ற இளைஞர்களைச் சேர்த்து, அக்குருகுலத்தைத் தொடங்கியுள்ளார்கள். இதுகாலை அக்குருகுலத்தில் 25 மாணவர்கள் வாசித்து வருகின்றனர். அம்மாணவர்களுக்கு வடமொழி, ஹிந்தி, இங்கிலீஷ், மலையாளம் முதலிய பாஷைகளை வளர்க்கும் கல்வியும், கைத்தொழில், சாயம்பூசுதல், தச்சுவேலை, சித்திரம் வரைதல் முதலிய தொழிற்கல்வியும் பயிற்றப்படுகின்றன. அக்குருகுலத்திற்காக அரசாங்கத்தார் 'நீலகிரியில் "பெர்ணஹில்' என்னும் இடத்தில் 4ஏகர் நிலமும் உதவியுள்ளார்கள். இன்னும் அக்குருகுலத்தை வளம்பெறச் செய்வதற்காக அக்குருகுலத்தின் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் நடராஜன் எம். ஏ. எல். டி. அவர்களும், மாணவர்கள் மூவரும் நிதிசேர்க்கும் பொருட்டுத் தமிழ்நாட்டில் உலவுகின்றார்கள்; அம்மாணவர்கள் ஸ்ரீ. நாராயண குருவைப் பற்றிக் கதைவழியாக பாட்டும், வசனமும் கலந்து இசையுடன் பாடும்பொழுது உண்டாம் உவகையை என்னென்பது; என்னென்பது!! அம்மாணவர் இன்னிசையுடன் கதை நடத்துவதைக் காணின் மலையாளத்தார் மலையாளி என்று மகிழ்வர்; தெலுங்கர் தெலுங்கர் என்று செப்புவர்; தமிழர் தமிழர் என்று சாற்றுவர்; வடமொழியாளர் வடநாட்டார் என்று வழங்குவர். இங்ஙனம் உரைக்கும் அலங்காரத்திற்கு அம்மாணவரை மாண்புறப்பயிற்றுவித்த ஸ்ரீமான். பி. நடராஜன் அவர்களின் ஊக்கமும் உறுதியும் உரைக்கவொண்ணாது, இங்ஙனம் தமிழ்நாட்டில் ஈரோடு சேலம், செங்கற்பட்டு, சென்னை முதலிய பல இடங்களிலும் கதைகளை நடத்துவதற்காகும் முன்னிகழ்ச்சிக் குறிப்புகளுடன் போந்துள்ளார்கள். ஸ்ரீமான் குடியரசு உபபத்திராதிபர் தாமல் பாலையா பிள்ளை அவர்கள் ஈரோட்டில், ஸ்ரீநாராயணகுருகுல கைங்கரியம் தங்குலகைங்கரியம் என உள்ளன்புடன் பலவழியிலும் உதவிசெய்தது போன்றே, தமிழ்நாட்டில் உதவிசெய்வார்களாயின், மலையின்மேலுள்ள ஸ்ரீநாராயண குருகுலம் மலைபோல் விளங்கும் ஸ்ரீமான் பி. நடராஜன் அவர்களின் முயற்சி முற்றுப்பெறும்; ஊக்கம் உறுதி பெறும்! திருவருள் உண்டு; உண்டு.

## முசிரி தேவி தேவி திருவிழா அழைப்பு

முசிரி 24 மனையாளர் என்கிற தேசாதிபதி தெலுங்குசெட்டியார்களின் கொல்லா நோன்புடன் நடைபெறும் தேவி தேவி விழாக்கள், கொல்லா நோன்புடன் முசிரிக்கு மேல்புறம் மாஞ்சோலையில் இம்மாதம் 27-ந்தேதி (குரோதன வருடம் மாசி மாதம் 15ந்தேதி) சனியன்று நடைபெறும். அவ்வமயம் ஈரோடு சௌரவசிபதியும், நகரபரிபாலனசபை அங்கத்தினரும், தனிகரும், போற்றுநருமாகிய ஸ்ரீமான் ச. முத்துக்கருப்பன்செட்டியார் அவர்கள் தலைமை வகிப்பார். கொல்லா நோன்பிற் சிறந்த இக்குல முன்னோர்களின் கருத்திற்கிணங்க, இத்திருவிழாவில் கொல்லாமையே நின்று நிலவுமாதலின், இக்குலகிளைஞருடனும், இளைஞருடனும் விஜயம் செய்து திருவிழாவைச் சிறப்பிக்க வேண்டுவதாக, இவ்விழா அமைச்சரும், முசிரி தாலூகா போர்டு அங்கத்தினருமான ஸ்ரீமான் வெ. சொக்கலிங்கம் செட்டியார் தெரிவிக்கிறார், மற்றும் அவ்வமயம் பல அறிஞர்கள் உபந்நியாசம் செய்வார்களென்றும் அறிவிக்கப்படுகிறது.

## ஓர் நம்பத்தகாத செய்தி

நாமக்கல் தாலூகா, சேந்தமங்கலம் ஜமீன்தாரும், ஜீவகாருண்யத்தை மேற்கொண்டு, சமீபத்தில் நடந்த இந்நகர் திருவிழாவில், ஆடு, கோழிகள் பலியிடுவதை நிறுத்தியவருமான, ஸ்ரீமான். ஐராவத உடையார், அந்தியூர் கள்ளுக்கடையை ஏலம் எடுத்திருப்பதாக ஓர் வதந்தி உலவுகிறது. இது உண்மையல்ல. ஸ்ரீமான். உடையார் அவர்களின் விரோதிகளால் செய்யப்பட்ட சூழ்ச்சிப்பிரசாரமேயாகும் என நம்பத்தகுந்த இடத்திலிருந்து நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

### கொங்கு வேளாளர் மகாநாடு

பொள்ளாச்சியில் நடைபெற்ற கொங்குவேளாள மகாநாட்டு நடவடிக்கைகள் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

ப—ர்.



## உண்மையான கதர்.

## கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர்போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடன் நடைபெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால், கைத்தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

S. ராமநாதன்
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:— ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்.

வந்தேமாதரம்.

## நூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷிபத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

S. ராமநாதன்
காரியதரிசிகத்தர், இலாகா.

## டைமண்ட் பிரஸ், ஈரோடு.

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரோப்ரைட்டர்.

என்றுமறியாத இணையில்லா கீர்த்தி.

எங்கள்

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, கைகால் ஓய்ச்சல், ஞாபகமின்மை முதலிய வியாதிகளைக் குணப்படுத்துவதில் சென்ற 45 வருஷகாலமாக என்றுமறியா இணையில்லா கீர்த்தியை யடைந்திருக்கிறது. நாங்கள் கேட்காமலே எங்களுக்கு வந்துகொண்டிருக்கும் நற்சாக்ஷிப்பத்திரங்களே போதுமான சான்றாகும். இன்றைக்கே உபயோகித்து குணத்தையறியுங்கள்.

32 மாத்திரைகள் அடங்கிய
டப்பி 1-க்கு ரூ. 1—0—0.

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:—
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

## "தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.
மானேஜர்:— "தேசோபகாரி" லிமிடெட்,
45-36வ.ந வீதி. ரங்கூன்.

## "தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடியுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.
பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. **2-0-0**
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. **1-8-0**
காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

## தமிழர்.

ஓர் உயரிய மாத வெளியீடு. அறிவு ஆற்றல் ஆராய்ச்சித் துறைகளிற் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டது.

இராயல் பதிப்பு:—
உள்நாட்டிற்கு ரூ. 2—8—0
வெளிநாட்டிற்கு ரூ. 3—0—0
சாதாரண பதிப்பு ரூ. 2—0—0

விலாசம்:—
அமைச்சர்
"தமிழர் நிலையம்"
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ் நாடு கதர் போர்டின் அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்
கத்தர் ஸ்டோர்
அமராவதிபாளையம்
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு
திருப்பூர் மார்க்கம்

## 100-வது காலண்டர் இனம்.

1004 உபதேசம் ரூ. 2–0–0, சச்சிதானந்த சிவம் ரூ. 1–2–0, மோடிசாதனம் ரூ. 4–0–0, ஜாதக அலங்காரஉரை ரூ. 2–0–0, ஞானக்கோர்வை ரூ. 1–8–0, பட்டினத்தார் உரை ரூ. 2–0–0, கந்தரநுபூதி ரூ. 0–8–0, சஷ்டிஉரை ரூ. 0–8–0, கந்தர் அந்தாதிஉரை ரூ. 0–12–0, திருமுருகாற்றுப்படை உரை ரூ. 0–12–0.

ஸ்ரீசாதுரத்ன சற்குருபுத்தகசாலை,
பார்க்டவுன், (கு) சென்னை.

முக்கிய கவனிப்பு.

## 18 காரட்டு ரோல்டு கோல்டு பிளேட் கேஸ் ரிஸ்லெட் கெடியாரங்கள்.



குடிஅரசு சந்தாதாரர்களுக்கு மாத்திரம் இக்குறைந்த விலையும், உயர்ந்த பவுண்டன் பேனாவும், புதிய 1926 வது வருஷத்திய அழகிய காலண்டரும் ஆர்டருக்கு இனாமாகப் பார்சலுடன் அனுப்பப்படும். சீக்கிரம் முந்துங்கள். இது நன்றாய் உழைக்கக் கூடியது. சரியான காலங்காட்டக்கூடியது. இதுபோன்ற கெடியாரங்கள் இனிவாய்ப்பதரிது. குறைந்தவிலையுள்ளது! சீக்கிரம் முந்துங்கள்!

நெ. 1, 22 காரட்டு ரோள்ட்கோள்ட் பிளேட் 5-வருஷ காரண்டியுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 12—0—0

நெ. 2 பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை 7—0—0

நெ. 3 22 காரட்டு ரோள்ட் கோள்ட் 5-வருஷ காரண்டி 15 கெம்புகள் செதுக்கிய லீவர் பாக்கட் கெடியாரம் உயர்ந்த சங்கிலியுடன் விலை ரூ. 15—0—0

விலாசம்:— நயாகரா வாட்ச் கம்பெனி தபால்பெட்டி நெ. 130, மதராஸ்

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.